Registered as a Newspaper

பக்கங்கள் :எட்டு

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 22 வள்ளுவர் ஆண்டு 2038 ஆனி 01 வெள்ளிக்கிழமை (15.06.2007) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 198

# கொழும்பிலிருந்து தமிழர்கள் வெளியேற்றப்படுவது இனிமேல் நடைபெறாது என உத்தரவாதம் இல்லை

## அரசாங்க பேச்சாளர் உத்தியோகபூர்வ அறிவிப்பு

கொழும்பு, ஜூன் 15



கொழும்பு நகர விடுதிகளிலிருந்து தமிழர்கள் வெளியேற்றப்படுவது இனிமேல் நடைபெறமாட்டாது என்று உத்தரவாதம் வழங்க முடியாது. ஜனநாயக நாட்டில் எதுவேண்டுமானாலும் நடக்கலாம்.

- இவ்வாறு நேற்று உத்தியோகபூர்வமாக அறிவித்தார் தகவல் ஊடகத்துறை அமைச்சர் அனுர பிரியதர்ஷன யாப்பா.

அமைச்சரவை முடிவுகளைத் தெரிவிக்கும் செய்தியாளர் மாநாடு நேற்றுக்காலை அரச தகவல் திணைக்கள கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. அச்சமயம் செய்தியாளரொருவர் எழுப்பிய கேள்வியொன்றுக்கு பதிலளிக்கும்போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அமைச்சர் அங்கு மேலும் கூறியதாவது:-

கொழும்பு விடுதிகளில் தங்கியிருந்த தமிழ் மக்களை வெளியேற்றியமை குறித்து பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க தெரிவித்த கருத்தே அரசின் நிலைப்பாடாகும். அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே தெரிவித்த கருத்து அவரின் சொந்தக் கருத்தாகும். ஜனநாயக நாட்டில் தனது சொந்தக் கருத்தை வெளியிடும் உரிமை எவருக்கும் இருக்கிறது.

கொழும்பிலிருந்து தமிழ் மக்களை பலவந்தமாக வெளியேற்றிய (08 ஆம் பக்கம் பார்க்க)

## விடுதலைப்புலிகளும் கருணா குழுவும் சிறுவர்களைச் சேர்ப்பதில் தீவிரம்

### ஐ.நா. செயற்குழு கண்டனமும் எச்சரிக்கையும்

ஜெனிவா, ஜூன்15

தமிழீழ விடுதலைப் புலிகளும் கருணா குழுவினரும் தத்தமது படைகளில் சிறுவர்களைச் சேர்ப்பதன் மூலம், கடுமையான முறையில் சிறுவர் உரிமைகளை மீறுவதாக ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையின் ஆயுதப் போராட்டத்தில் சிறுவர் தொடர்பான செயற்குழு கண்டனம் தெரிவித்திருக்கின்றது.

உடனடியாக இருதரப்பினர்களும் சிறுவர்களை அவர்களது பெற்றோர்களிடம் அனுப்பி வைக்க வேண்டும் என்றும் செயற்குழு வலியுறுத்தி உள்ளது.

இதேவேளை -

தமது கட்டுப்பாட்டுப் பகுதியில் உள்ள பாடசாலைகளில் குறித்த சிறுவர்களை இரு அமைப்புகளும் அனுமதிக்க வேண்டும் எனவும் ஐக்கிய நாடுகளின் செயற்குழு கேட்டுள்ளது.

இது குறித்து தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும், கருணா குழுவினருக்கும் அறிவிக்குமாறு ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளரை சிறுவர்கள் சம்பந்தமான செயற்குழு கேட்டிருக்கிறது. இந்தச் செயற்குழுவில் ஐ.நா. பாதுகாப்புச் சபையில் அங்கம் வகிக்கும் 15 நாடுகளின் பிரதிநிதிகளும் உள்ளனர்.

கோரிக்கையை இரு தரப்பும் செவிமடுக்காமற் போனால் மேலதிக நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அக் குழு எச்சரித்திருக்கின்றது.

எதிர்வரும் நவம்பர் மாதத்தில் சம்பந்தப்பட்ட தரப்புகள் மீது என்னவிதமான (08 ஆம் பக்கம் பார்க்க)

## பெரும் குண்டுச் சத்தத்தால் நகரில் நேற்றுப் பரபரப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 15

நேற்று நண்பகல் 11.45 மணியளவில் யாழ். நகரம் பெரும் வெடிச்சத்தத்தால் அதிர்ந்தது.

அது எதனால் உண்டான சத்தம், சம்பவம் எதுவாக இருக்கும் என்பது தெரியாமல் நகரப் பகுதி எங்கும் பெரும் பரபரப்பு நிலவியது.

கிளைமோர் தாக்குதலாக இருக்குமோ அல்லது குண்டு வீச்சுத் தாக்குதலாக இருக்குமோ என்று ஒருவரை மற்றவர் மாறி மாறி விசாரிக்கும் பதற்ற நிலை பல நிமிட நேரம் தொடர்ந்தது.

யாழ். பொலீஸ் நிலையத்தில் வைத்து, (08 ஆம் பக்கம் பார்க்க)

## பிரபாகரனை அழிப்பதற்கு 3 வருடங்கள் தேவையாம்!

### கோத்தபாய சொல்கிறார்





கொழும்பு, ஜூன் 15

"தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனை அழிப்பதற்கு இன்னும் மூன்று வருடங்கள் தேவை"

- இவ்வாறு பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். 'நியூயோர்க் டைம்ஸ்' பத்திரிகையாளருக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

இலங்கையில் சமாதானப் பேச்சுகள் கானல் நீராகிவிட்டன. தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரனை அழிப்பதே எமது இராணுவ முனைப்பின் குறிக்கோள். அதனைச் செய்வதற்கு சுமார் மூன்று வருடங்கள் செல்லும் - அதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (08 ஆம் பக்கம் பார்க்க)

## சாவகச்சேரியில் 'கிபிர்'! முகமாலையில் ஷெல்!!

யாழ்ப்பாணம், ஜூன் 15

சாவகச்சேரிப் பகுதியில் நேற்றுக் காலை 'கிபிர்' விமானங்கள் வட்டமிட்டதால் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

மக்கள் பதற்றத்துடன் பாதுகாப்புத் தேடி அங்கும் இங்குமாக ஓடினர்.

மூன்று, நான்கு தடவைகள் விமானங்கள் வட்டமிட்ட போதும் தாக்குதல் எதுவும் நடைபெறவில்லை.

அதேவேளை -

முகமாலைப் பகுதியில் நேற்றுக் காலை முதல் நண்பகல்வரை ஷெல் சத்தங்கள் தொடர்ந்து கேட்டவண்ணம் இருந்தன என்று சாவகச்சேரியில் இருந்து கிடைத்த தகவல்கள் தெரிவித்தன. (அ-1-207)

## மந்துவிலில் சுடப்பட்டு இறந்த மூவரில் ஒருவர் மாணவன்

யாழ்ப்பாணம், ஜூன் 15

மந்துவில், மாத்தளம்குளம் பகுதியில் நேற்றுமுன்தினம் சூட்டுக் காயங்களுடன் மீட்கப்பட்ட மூன்று இளைஞர்களின் சடலங்களில் ஒன்று உறவினர்களால் அடையாளம் காணப்பட்டுள்ளது.

மந்துவில் மேற்கைச் சேர்ந்த ராஜேந்திரன் கஜன் (வயது 19) என்ற மாணவனின் சடலம் என அவரது உறவினர்கள் அடையாளம் காட்டினர்.

இவர் ஜி.சீ.ஈ. (சாதாரண) பரீட்சைக்கு ஒரு தடவை தோற்றிவிட்டு, இரண்டாவது தடவையாக பரீட்சை எழுத கல்வி பயின்றுகொண்டிருந்தவர் எனத் தெரிவிக்கப்பட்டது.

ஏனைய இரு சடலங்களும் நேற்று மாலை வரை அடையாளம் காணப்படவில்லை (08 ஆம் பக்கம் பார்க்க)

## பிலிப்பைன்ஸ் தொண்டுப் பணியாளர் கடற்படையினரால் சுடப்பட்டுப் படுகாயம்!

### திருமலை அலஸ்தோட்டம் பகுதியில் புதனிரவு சம்பவம்

கொழும்பு, ஜூன் 15

இலங்கையில் ஆழிப்பேரலை அனர்த்த நிவாரணப் பணிகளில் ஈடுபட்டிருக்கும் அமெரிக்காவைத் தளமாகக் கொண்ட ''மேர்ஸி கோர்ப்ஸ்'' தன்னார்வத் தொண்டு நிறுவனத்தின் பணியாளர் ஒருவர் திருகோணமலையில் சுட்டுப் படுகாயப்படுத்தப் பட்டிருக்கிறார். கடற்படையினரின் துப்பாக்கிப் பிரயோகத்திலேயே இவர் காயமடைந்தார் என்று தெரிவிக்கப்படுகிறது.

பிலிப்பைன்ஸ் நாட்டைச் சேர்ந்த இவர் தலையில் படுகாயமடைந்த நிலையில் கொழும்பு தேசிய மருத்துவமனையில் (08 ஆம் பக்கம் பார்க்க)

## தூத்துக்குடி கடற்பகுதியில் 4 இலங்கை மீனவர்கள் கைது

சென்னை, ஜூன்15

தூத்துக்குடிக்கு அருகே இந்தியக் கடற்பகுதிக்குள் அத்துமீறி நுழைந்தபடகில் இருந்த மீனவர்கள் நால்வர் கைது செய்யப்பட்டுள்ளார்கள்.

அத்துமீறி நுழைந்த படகைச் சுற்றிவளைத்த கரையோரக் காவற்படையினர் அதில்இருந்த நான்குபேரையும் கைதுசெய்துவிசாரணை செய்தனர்.

தாங்கள் மீனவர்கள் என்றும் கடுங்காற்றுக் காரணமாக இந்தியக் கடற்பகுதிக்குள் வந்தனர் என்றும் அவர்கள் தெரிவித்தனர். எனினும்அவர்கள் தடுத்துவைத்து விசாரணை செய்யப்படுவருகின்றனர். (அ-1)

## ரணில் சரித்திரம் படிக்க வேண்டுமாம் ஊடகத்துறை அமைச்சர் சொல்கிறார்

கொழும்பு, ஜூன் 15

''எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு சரித்திரம் தெரியவில்லை. 2ஆம் உலகமகா யுத்தத்துக்கு முன்னரும் பின்னருமான ஐரோப்பிய நாடுகளின் சரித்திரத்தை அவர் இப்போதாவது படிக்க வேண்டும்''

- இவ்வாறு தகவல் ஊடகத்துறை அமைச்சர் அநுர பிரியதர்சன யாப்பா தெரிவித்தார்.

அமைச்சரவை முடிவுகளைத் தெரிவிக்கும் செய்தியாளர் மாநாடு நேற்று நடைபெற்றது. அதிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஜேர்மனியை ஹிட்லர் அழித்தது (08ஆம் பக்கம் பார்க்க)

## பேசாலை கடலில் சிமெந்துடன் படகில் வந்த 5 பேர் கைது!

கொழும்பு, ஜூன் 15

மன்னார் பேசாலை கடற்பரப்பில் மூன்று படகுகளில் வந்த ஐந்து சந்தேக நபர்களை கடற்படையினர் கைதுசெய்து தலைமன்னார் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்தனர் என்று தேசிய பாதுகாப்பு ஊடக மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

புதன்கிழமை மாலை சந்தேகத்திற்கிடமான மூன்று படகுகள் கரைநோக்கிப் பயணித்துக் கொண்டிருந்தவேளை கடற்படையினர் அந்தப் படகுகளை நோக்கி எச்சரிக்கை வேட்டுக்களை தீர்த்தனர். பட (08 ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.நா. சபையின் மனித உரிமைகளுக்கான தூதுவர் இலங்கைக்கு தாமே நேரில் வந்து ஆராயவுள்ளார்

கொழும்பு, ஜூன் 15

இலங்கையில் இடம்பெறும் மனித உரிமை தொடர்பான நிலைமைகளை நேரில் பார்வையிட விரும்புவதாக ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகளுக்கான தூதுவர் லூயி ஆர்பர் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் கோரியுள்ளார். ஜனாதிபதியும் அதற்கு இணக்கம் தெரிவித்ததாக அறியவந்தது.

நேற்று ஜெனிவாவுக்குச் சென்ற ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான உயர்மட்டக் குழுவினர் அங்கு ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகளுக்கான தூதுவர் உட்பட்ட உயர் அதிகாரிகளைச் சந்தித்துக் கலந்துரையாடினர்.

அவ்வேளை இலங்கையில் இடம்பெற்று வரும் மனித உரிமைகள் தொடர்பாகவும், (08 ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவக் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள தமிழ்ப் பிரதேசங்களில் குடிசன மதிப்பீடு

யாழ்ப்பாணம், ஜூன் 15

யாழ்ப்பாணம், திருகோணமலை, மட்டக்களப்பு, வன்னி ஆகிய மாவட்டங்களில் - இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் உள்ள பிரதேசங்களில் - குடிசன மதிப்பீட்டை உடன் நடத்துமாறு அந்தந்த மாவட்டங்களின் அரச அதிபர்களுக்கு ஜனாதிபதி பணிப்புரை விடுத்துள்ளார்.

குடிசன மதிப்பீட்டுத் திணைக்களப் பணிப்பாளரின் அறிவுறுத்தலைப் பெற்று உடன் இந்தப் பணியை ஆரம்பிக்குமாறு ஜனாதிபதி தமது பணிப்புரையில் தெரிவித்துள்ளார்.

கடந்த காலங்களில் இந்த மாவட்டங்களில் யுத்த சூழல் நிலவியதால் கணக்கெடுப்புப் பணிகள் இடம்பெறவில்லை. கணக்கெடுப்பு நடத்த நடவடிக்கை எடுக் (08 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## நயினை நாகபூஷணி பெருந்திருவிழா

# குறிகாட்டுவனுக்கான பஸ்சேவை வழமையான நேர அட்டவணைப்படி

யாழ்ப்பாணம், ஜூன் 15

வரலாற்றுச் சிறப்பு மிக்க நயினாதீவு நாகபூஷணி அம்மன் ஆலய வருடாந்தப் பெருந் திருவிழா நாளை சனிக்கிழமை காலை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

குடாநாட்டில் பல பாகங்களில் இருந்தும் பெரும் எண்ணிக்கையான பக்தர்கள் இன்று தொடக்கம் அங்கு கூடுவர் என எதிர்பார்க்கப்படுகின்றது.

யாழ்ப்பாணத்தில் இருந்து குறிகாட்டுவான் வரை பஸ்களில் செல்லும் பக்தர்கள் அங்கு இடம்பெறும் சோதனை நடவடிக்கைகளின் பின்னர் படகுகள் மூலம் நயினாதீவுக்குச் செல்வர்.

பக்தர்களின் வசதி கருதி ஆலயச் சூழலில் விசேட ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில் இருந்து குறிகாட்டுவானுக்கு பக்தர்கள் செல்வதற்காக வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் பஸ் சேவைகள் வழமையான நேர அட்டவணையின் பிரகாரம் நடைபெறும் என போக்குவரத்துச் சபை வட்டாரங்கள் தெரிவித்தன.

குறிகாட்டுவானுக்கான வழமையான நேர அட்டவணைப்படி சேவைகள் இடம்பெறும் எனவும், ஆலய தரிசனத்துக்கென அதிக எண்ணிக்கையான பக்தர்கள் சேர்ந்தால் மட்டுமே மேலதிக பஸ் சேவை நடத்தப்படும் எனவும் அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

எனினும் சப்பரத்திருவிழா நாளன்று தொடக்கம் மேலதிக பஸ் சேவை நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (அ-50)

(மற்றொரு செய்தி 5ஆம் பக்கத்தில்)

# மந்துவில் கிழக்கில் மர்மப் பொருள் வெடித்ததில் குடும்பப்பெண் காயம்

யாழ்ப்பாணம், ஜூன் 15

மந்துவில் கிழக்குப் புகுதியில் நேற்று நண்பகல் 12 மணியளவில் மர்மப் பொருள் ஒன்று வெடித்ததில் குடும்பப் பெண் ஒருவர் காயமடைந்தார்.

அதே இடத்தைச் சேர்ந்த லிங்கேஸ்வரன் உதயமலர் (வயது - 48) என்ற பெண்ணே காயமடைந்தவராவார்.

சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்ட இவர் மேலதிக கிசிச்சைக்காக யாழ். ஆஸ்பத்திரிக்கு அனுப்பப்பட்டுள்ளார்.

வளவிற்குள் உள்ள குப்பைகளை கூட்டி அதை எரித்தபோதே குப்பைக்குள் இருந்த மர்மப் பொருள் ஒன்று சத்தத்துடன் வெடித்தது என்றும் அதில் இவர் காயமடைந்தார் என்றும் தெரிவிக்கப்பட்டது. (அ-1-207)

# இலங்கை நீதித்துறைச் செயற்பாடுகள் சுயேச்சைத் தன்மையை இழந்துள்ளன

## ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸில் பிரஸ்தாபம்

ஜெனிவாவில் கடந்த திங்கட்கிழமை ஆரம்பமான ஐ.நா. மனித உரிமைகள் கவுன்சில் மாநாட்டில் இலங்கையின் நீதித்துறை நிறுவனங்களின் சுயேட்சைத் தன்மை குறித்து ஆராயப்பட்டுள்ளது.

சர்வதேச சட்ட நிபுணர்கள் ஆணைக்குழுவின் செயலாளர் நாயகம் நிக்கலஸ் ஹாவன், மாநாட்டில் கருத்து வெளியிடுகையில் -

இலங்கையில் அரசமைப்பு முடங்கிப் போயுள்ளமையால் நீதித்துறை, நீதித்துறை சேவைகள் ஆணைக்குழு ஆகியவை உட்பட இலங்கையில் உள்ள நிறுவனங்கள் யாவற்றிலும் சுயேச்சைத் தன்மை பாதிக்கப்பட்டுள்ளது என்று கூறினார்.

அரசமைப்புச் சபை இல்லாமையால் ஜனாதிபதி அரசமைப்பின் 17ஆவது திருத்தத்திற்கு மாறாக செயற்பட்டு, நீதித்துறை சேவைகள் ஆணைக்குழு, உயர் நீதிமன்றம், மேன்முறையீட்டு நீதிமன்றம் மற்றும் மிக அண்மையில் சட்டமா அதிபர் பதவிக்கும் நேரடியாக நியமனங்களைச் செய்துள்ளார்.

இவ்வாறு ஒருதலைபட்சமான ஜனாதிபதியின் செயற்பாடுகள் இலங்கையில் சட்ட ஒழுங்கு செயற்பாடுகளை சீரழிப்பதற்குத் தான் உதவும் - எனவே இந்த நிலைமை விரைவாக சீர்செய்யப்படுவது அவசியம் - என்றும் நிக்கலஸ் ஹாவன் வற்புறுத்தினார்.

நீதிக்குப் புறம்பான கொலைகள் மற்றும் பலவந்தமாக காணாமற் போகச் செய்யப்பட்டவர்கள் தொடர்பான வழக்குகளை விசாரித்து வந்த நீதிமான்கள் நினைத்தபடி இடமாற்றம் செய்யப்பட்டிருப்பதும் நீதிமன்ற விசாரணைகள் பாரபட்சமின்றி நடைபெறுமா என்ற வகையில் கேள்விகளை எழுப்பியிருப்பதாக மனித உரிமைகள் கவுன்ஸில் தெரிவித்துள்ளது.

இந்தக் குற்றச்சாட்டுகளை இலங்கை சார்பில் ஆஜராகியுள்ள பிரதி சொலிசிட்டர் ஜெனரல் ஷவிந்திரா பெர்னாண்டோ மறுத்துரைத்தார்.

17 மனிதநேய ஊழியர்கள் கொலை தொடர்பான வழக்கு விசாரணையை மேற்கொண்ட நீதிவானை இடமாற்றம் செய்யப்பட்டமைக்கு அவரையும் ஒரு சாட்சியாக அழைக்க முடியும் என்பதே காரணம்.

மூதூரில் பணியாற்றிக் கொண்டிருந்த பிரஸ்தாப நீதிவான் அக்காலப் பகுதியில் விடுதலைப் புலிகளின் தாக்குதல்களின்போது பாதிக்கப்பட்டிருந்தார். உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தில் இருந்த அவரது முக்கிய ஆவணங்கள் களவாடப்பட்டிருந்தன. பொலிஸ் நிலையத்தில் அவர் அடைக்கலம் புகுந்திருந்தார். எனவே விசாரணைகள் தொடரும் போது அவரையும் ஒரு சாட்சியாக அழைப்பதற்கான சாத்தியம் உண்டு என்று பெர்னாண்டோ சுட்டிக் காட்டினார்.

நீதிவான்கள் மற்றும் சட்டத்தரணிகளின் சுயாதீனம் தொடர்பாக ஆய்வு செய்து அறிக்கை சமர்ப்பிக்கும் ஐ.நா. பிரதிநிதி லியான்றோ டெஸ்பொய் தமது அறிக்கையில், தாம் இலங்கைக்கு விஜயம் செய்வதில் அக்கறை கொண்டிருப்பதாகத் தெரிவித்தார். (அ-ப)

# யாழ். பல்கலை., பொது நூலகத்திற்கு இந்திய அரசு நூல்கள் கையளிப்பு

இந்திய அரசு, யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான பீடம் மற்றும் யாழ். பொதுநூலகம் போன்றவற்றுக்கு பல்துறை சார்ந்த ஒரு தொகை நூல்களை அன்பளிப்பாக வழங்கியுள்ளது.

இந்த நூல்களை வழங்கும் நிகழ்வு நேற்று மாலை கொழும்பிலுள்ள இந்திய கலாசார நிலையத்தில், இலங்கைக்கான இந்தியத் தூதுவர் அலோக் பிரசாத் தலைமையில் இடம்பெற்றது.

யாழ். பல்கலைகழக மருத்துவப் பீடாதிபதி, கலாநிதி கே.சிவபாலன் மற்றும் யாழ். மாநகரசபை ஆணையாளர் எஸ்.சரவணபவ ஆகியோரிடம் இந்தியத் தூதுவர் இந்த நூல்களை கையளித்தார்.

நேற்றைய இந்த நிகழ்வில் தமிழ்த் தேசிக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராஜா, சுரேஸ் பிரேமச்சந்திரன் மற்றும் பத்மினி சிதம்பரநாதன் ஆகியோர் உட்பட கொழும்பு, யாழ்பாணப் பல்கலைக் கழகப்பீடாதிபதிகள், கல்வி அதிகாரிகள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

யாழ். பல்கலைக்கழகத்தின் தேவைகளை நிறைவு செய்யும் பொருட்டு இந்திய அரசு தொடர்ந்தும் உதவிகளை வழங்கும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (சி)

# தமிழ்த் தினப் போட்டிகளில் முதலிடம் பெற்ற மாணவர்கள்

யாழ்ப்பாணம், ஜூன் 15

கொழும்பில் கடந்த வாரம் நடைபெற்ற தமிழ்த் தின தேசிய மட்டப் போட்டிகளில், தனிப்போட்டிகளில் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த ஆறுபேர் முதலிடம் பெற்றுள்ளனர்.

முதலிடம் பெற்றவர்களின் விவரங்கள் வருமாறு:

ஆக்கத்திறன் வெளிப்பாடு பிரிவு 1 - ஆனந்தராசா ஹரிசங்கர் (கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை), பேச்சு பிரிவு 1- கனகசுந்தரம் சரணிகா (யாழ். இந்து ஆரம்ப பாடசாலை), நடனம் (தனி - பிரிவு 3 -ஜெ.பிரியவதனி (வேம்படி), நடனம் (தனி - பிரிவு 5) - பா.அபிராமி (இராமநாதன் கல்லூரி), நடனம் (தனி - பிரிவு 2) - ா. ஐஸ்திகா (இராமநாதன் கல்லூரி), பாவோதல் - பிரிவு 5 - ஜெ. வைஷ்ணவி (மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலை). (அ-1)

(மற்றொரு செய்தி 5ஆம் பக்கத்தில்)

# நாவற்குழிக் களஞ்சியத்தில் தொழிலாளர் பணிப்புறக்கணிப்பு

குருநகர், ஜூன் 15

நாவற்குழி உணவுக் களஞ்சியத்தில் பொருள்கள் ஏற்றி இறக்கும் பணியில் ஈடுபட்டுள்ள சுமார் நூறு தொழிலாளர்கள் நேற்று பிற்பகல் 2 மணிமுதல் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டனர்.

தமக்கு வழங்கவேண்டிய இரண்டரை மாதச் சம்பளத்தை வழங்கக்கோரியே இந்தப் பணிப்புறக்கணிப்பில் அவர்கள் ஈடுபட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

பணிப்புறக்கணிப்புக் காரணமாக களஞ்சியப் பணிகள் நேற்றுப் பிற்பகலுக்குப் பின் பாதிக்கப்பட்டன. (அ-1-51)

**தவறிவிட்டது**

**சமாதியடி கோயிலடி, குப்பிளானைச் சேர்ந்த சிவலிங்கம் வத்சலா என்பவருடைய தே.அ. அட்டை (627452683V) உரும்பிராய் சிவன் வீதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் உரும்பிராய் தம்பித்துரை வளவு, உரும்பிராய் கிழக்கு என்னும் முகவரியில் ஒப்படைத்துதவவும்.**

# இரு இலங்கையர்களுக்கு சவூதியில் மரணதண்டனை

கொழும்பு, ஜூன் 15

சவூதி நாட்டைச் சேர்ந்த பெண் ஒருவரைக் கொலை செய்தார்கள் என்று குற்றம் சாட்டப்பட்ட இரு இலங்கையர்களுக்கும் ஒரு இந்தியருக்கும் சவூதி அரேபியா நீதிமன்றம் நேற்று மரண தண்டனை விதித்துத் தீர்ப்பு வழங்கியது.

சவூதி நாட்டைச்சேர்ந்த பெண் ஒருவரைக் கத்தியால் குத்திக் கொலை செய்தார்கள் என்ற குற்றத்திற்காகவே இவர்கள் இரு வருக்கும் மரண தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

இக்கொலையுடன் தொடர்புடையவர்கள் என்று சந்தேகிக்கப்படும் மேலும் ஐந்து இலங்கையர்களுக்கு 5 வருடச் சிறைத்தண்டனையும், 500 கசையடிகளும் வழங்கி நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளது. (சி)

**வாடகைக்கு**

**யாழ். நகர மத்தியில் சகல வசதிகளும் கொண்ட கடை வாடகைக்கு உண்டு.**

தொடர்பு:

**தொ.பே. 021 222 5593.**

**தட்டெழுத்தாளர் தேவை**

**தமிழ், ஆங்கிலம், கணனி தட்டெழுத்து தெரிந்தவர்கள் உடன் தொடர்பு கொள்ளவும்.**

தொடர்பு: ராம் நெற் கொம்,

கே.கே.எஸ். வீதி, மல்லாகம் சந்தி. தொ.பே. 222 5902

## மரண அறிவித்தல்

### வரதநாதன் தவச்செல்வி

வேலணை மேற்கைப் பிறப்பிடமாகவும் ஜேர்மனியை வசிப்பிடமாகவும் கொண்ட வரதநாதன் தவச்செல்வி 10.06.2007 ஞாயிற்றுக்கிழமை ஜேர்மனியில் காலமானார்.

அன்னார் வரதநாதனின் அன்பு மனைவியும், கணேசபிள்ளை - மீனலோசனி தம்பதியரின் அன்பு புத்திரியும் தம்பாபிள்ளை - பவளவல்லியம்மா தம்பதியரின் மருமகளும் மதுஷியா, லக்ஷியா, காசன் ஆகியோரின் அன்புத் தாயும் கனகேந்திரன் (லண்டன்), திருச்செல்வி (யா/ கோண்டாவில் இராம கி.ம. வித்தியாலயம் - ஆசிரியை), நற்குணராசா (லண்டன்), சந்திரகலா, மதிவதனி (கொழும்பு), ஆனந்தக்குமாரன் (அமெரிக்கா), வதனா (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஈஸ்வரன் (கனடா), சாரதாம்பாள் (கனடா), ஆத்மசரன் (பிரான்ஸ்), யோகநாதன், வரதா (பிரான்ஸ்), தேவநாதன் (கனடா), செல்வநாதன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (20.06.2007) புதன்கிழமை ஜேர்மனியில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :-

**ந. கணேசபிள்ளை (தந்தை)**
**த. யோகநாதன் (மைத்துனர்)**

*73, சம்பியன் வீதி,*
*கொக்குவில் கிழக்கு.*
*004940571469 13 (ஜேர்மனி),*
*0776669054 (கொக்குவில்).*

(61701)

**உள்நாட்டில் இடம்பெயர்ந்தோருக்கும் மீள்குடியமர்ந்தோருக்குமான தேசிய பாதுகாப்பிற்கும் நிலையான தீர்விற்குமான விசேட செயற்றிட்டம்**

**இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு**

**பதவி வெற்றிடங்கள்**

**இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் உள் நாட்டில் இடம்பெயர்ந்தோருக்கான விசேட செயற்றிட்டத்தில் பின்வரும் பதவிகளிற்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.**

**01. உதவி சட்ட ஆலோசகர் (Assistant Legal Officer)**
**02. நிர்வாக, கணக்குப் பதியுநர் (Account & Administrative Assistant)**
**03. அலுவலக உதவியாள் (Office Aid)**
**04. சாரதி (Driver)**

**தங்களது சுயவிவரத்துடன் உறவினரல்லாத இரு நடுவர்களின் பெயர் விவரங்கள் அடங்கலாக தங்களது கல்விச்சான்றிதழ்களின் பிரதியுடன் கீழ்வரும் முகவரிக்கு 22.06.2007ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.**

**உள்நாட்டில் இடம்பெயர்ந்தோரிற்கான விசேட செயற்றிட்டம்,**
**இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு,**
**இல. 01, 3ஆவது குறுக்குத் தெரு,**
**யாழ்ப்பாணம்.**
**தொலைபேசி இல. 021 222 5470**
**தொலைநகல் இல. 021 222 2021**
**மின்அஞ்சல் முகவரி rvpk@sltnet.lk.**

(சி/52671)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடாநாட்டுத் தபாலக ஊழியர் சம்பளத்துக்கு இங்கேயே வேண்டிய நிதியைத் திரட்டப் பணிப்பு!

## திறைசேரி வழங்குவதற்கு மறுப்பு!!

யாழ்ப்பாணம்,ஜூன்15

குடாநாட்டில் இயங்கும் தபாலக ஊழியர்களுக்கான சம்பளம் மற்றும் ஏனைய கொடுப்பனவுகளை வழங்குவதற்கு இனி வரும் காலங்களில் நிதி அனுப்பப்படமாட்டாது என்று திறைசேரி அறிவித்தல் விடுத்துள்ளது.

உள்ளூர் வளங்களைப் பயன்படுத்தி அதற்கான நிதியை சேகரிக்குமாறும் திறைசேரி தெரிவித்துள்ளது.

இதனையடுத்து, சகல உப தபாலகங்களும் தமது சேவையை உடனடியாக விஸ்தரிக்க வேண்டும் என்று வட வலய பிரதித் தபால் மா அதிபர் கோரிக்கை விடுத்துள்ளார்.

தபால் நிலையங்களில் வருமானம் அதிகரிக்கும் வகையில் சேவைகள் இடம்பெற வேண்டும் எனவும், இதற்கு உபதபாலகத் தலைவர்கள் அக்கறையுடன் செயற்பட வேண்டும் என்றும் அவர் கேட்டுள்ளார்.

தபால் ஊழியர்களுக்கு சம்பளக் கொடுப்பனவுகளை வழங்குவதற்கு மூன்று மில்லியன் ரூபாவும் ஏனைய கொடுப்பனவுகள் வழங்குவதற்கு இரண்டு மில்லியன் ரூபாவுமாக மொத்தம் ஐந்து மில்லியன் ரூபா தேவையாக உள்ளது.

இந்நிலையில், இந்நிதி இனிவரும் காலங்களில் உள்ளூரிலேயே திரட்டப்பட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இது தொடர்பாக சகல உப தபாலத் தலைவர்கள், உத்தியோகத்தர்களுடனான கலந்துரையாடல் ஒன்று எதிர்வரும் 20ஆம் திகதி யாழ். [illegible] தபாலகத்தில் நடத்தப்படவுள்ளது என்று பிரதித் தபால் மாஅதிபர் வி.குமரகுரு மேலும் தெரிவித்துள்ளார். (203)

## நேர்முகப் பரீட்சை

யாழ்ப்பாணம்,ஜூன்15

இலங்கை அதிபர் சேவை வகுப்பு 2 தரம் II இற்கு ஆள்சேர்ப்பு செய்வதற்கு வலிகாமம் வலயத்தைச் சேர்ந்தவர்களுக் கான நேர்முகப்பரீட்சை இன்று வெள்ளிக் கிழமை முதல் ஆரம்பமாகின்றது. யாழ். வலய ஆசிரிய நிலையத்தில் இந்த நேர்முகப் பரீட்சை நடைபெறும் (202-95)

## சங்கானைச் சந்தையில் சுகாதாரச் சீர்கேடு

சங்கானை,ஜூன்15

சங்கானை மரக்கறிச் சந்தையில் அமைந்துள்ள மலசலகூடத்தால் சுகாதாரச் சீர்கேடு நிலவிவருகின்றது. இதனால் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

இந்த மலசலகூடத்தைப் பயன்படுத்துவோர் அதனை ஒழுங்கான முறையில் பயன்படுத்தாமையாலேயே சுகாதாரச் சீர்கேடு நிலவுகிறது. இதனால் இப்பகுதி களில் துர்நாற்றம் வீசுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, உரியவர்கள் இவ்விடயத்தில் கவனமெடுக்க வேண்டுமென மக்கள் கேட்டுள்ளனர். (203-29)

## சுன்னாகம் பிரதேச நலன்புரி நிலையங்களில் வசதிகள் குறைவு; மக்கள் பெரும் சிரமம்

யாழ்ப்பாணம்,ஜூன்15

சுன்னாகம் பிரதேசத்தில் உள்ள நலன்புரி நிலையங்களில் வசிக்கு மக்கள் பெரும் கஷ்ரங்களின் மத்தியில் வாழ்வதாகக் கவலை வெளியிட்டுள்ளனர்.

சுன்னாகம் சபாபதிப்பிள்ளை வீதியில் உள்ள இரு நலன்புரி நிலையங்களில் 200 இற்கும் அதிகமான குடும்பங்கள் வசிக்கின்றன. இக்குடும்பங்களின் தேவைகளுக்கேற்ப மலசலகூடங்களும், குடிதண்ணீர் வசதிகளும் அந்த முகாமில் இல்லை. இதனால் பல சிரமங்களை எதிர்கொள்வதாகவும் சுட்டிக்காட்டுகின்றனர்.

குறிப்பாகப் பொதுக்கிணறுகளையே பயன்படுத்த வேண்டியுள்ளதால் பெண்கள் சிரமப்படுகின்றனர். மலசலகூடங்களும் பொதுவாகப் பயன்படுத்தப்படுவதால் சுகாதாரச் சீர்கேடுகள் நிலவும் வாய்ப்புள்ளது.

கண்ணகி குடியிருப்புக்குச் செல்லும் வீதி குன்றும் குழியுமாக தூர்ந்து போய்க் காணப்படுகின்றது. மழைக்காலங்களில் இவ்வீதியால் பயணிப்பது சிரமமாகவுள்ளதாக மக்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

தன்னார்வத்தொண்டு நிறுவனங்கள் மக்களின் நலனைக் கருத்திற்கொண்டு உதவிகளை வழங்க முன்வரவேண்டும் என குடியிருப்பு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (202-79)

## வினாடி - வினாப் போட்டி ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம்,ஜூன்15

யாழ்.வலயக்கல்வி அலுவலகத்தால் தரம் 6 முதல் 11 வரையான மாணவர்களுக்கு நாளை சனிக்கிழமை நடத்தப்பட விருந்த தமிழ் மற்றும் ஆங்கில மொழிமூல விஞ்ஞான வினாடி வினாப் போட்டிகள் தவிர்க்க முடியாத காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளதாக யாழ்.வலயக்கல்விப் பணிப்பாளர் வி.ரி.செல்வரட்ணம் அறிவித்துள்ளார்.

எதிர்வரும்23 ஆம் திகதி சனிக்கிழமை இப்போட்டிகள் இடம்பெறும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (1-203-11)

## மின் இணைப்பு பயிற்சிக்கு விண்ணப்பிக்கலாம்

நவாலி,ஜூன்15

இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபை சண்டிலிப்பாய் பிரதேச செயலகம் ஊடாக வீட்டு மின்னிணைப்பு தொழிற்பயிற்சி நெறிக்கு தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

இப்பயிற்சி நெறிக்கு விண்ணப்பிப்போர் ஜி.சீ.ஈ. சாதாரண தரம் கற்றுள்ளதுடன் 18 வயதிற்கும் 20 வயதிற்கும் இடைப்பட்டவராக இருத்தல் வேண்டும் இப்பயிற்சி 6 மாத காலம் நடைபெறும். பயிற்சிக்காலத்தின் போது ஊக்குவிப்புப் பணமாக 450 ரூபா வழங்கப்படும்.

பயிற்சி நெறியில் இணைய விரும்புவோர் எதிர்வரும் 22ஆம் திகதிக்கு முன்னர் இலங்கை தொழிற்பயிற்சி அதிகர சபை, கிராமிய நிலையம், சண்டிலிப்பாய் என்னும் முகவரிக்கு விண்ணப்பங்களை அனுப்பிவைக்குமாறு பயிற்சி நிலைய பொறுப்பதிகாரி வே. ஸ்ரீகுகன் கேட் டுள்ளார். பயிற்சி அடுத்த மாதம் 2ஆம் திகதி ஆரம்பமாகுமென்று அறிவிக்கப்பட்டுள்ளது. (202-100)

## வடமராட்சிப் பிரதேசத்தில் அத்தியாவசிய உணவுப் பொருள்களுக்குத் தட்டுப்பாடு

கரவெட்டி,ஜூன்15

வடமராட்சிப் பிரதேசத்தில் அத்தியாவசிய உணவுப்பொருள்களான அரிசி, மா, சீனி போன்றவை பெரும் தட்டுப்பாடாகவுள்ளன.

அண்மைக்காலத்தில் பிரதேசத்தின் தனியார் வர்த்தக நிலையங்களிலும் பலநோக்குக் கூட்டுறவுச் சங்க விற்பனை நிலையங்களிலும் மேற்படி பொருள்கள் தாராளமாகக் காணப்பட்டன. எனினும் கடந்த சில தினங்களில் திடீரென இப்பொருள்களுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. விற்பனை நிலையங்களில் இருந்த பொருள்கள் மாயமாக மறைந்துள்ளன. சில தனியார் கடைகளில் இப்பொருள்கள் கூடிய விலைக்கு விற்பனை செய்யப்படுகின்றன.

எனவே, சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இந்த விடயத்தைக் கவனத்தில் எடுத்து உடன் செயற்பட்டு தட்டுப்பாட்டை நீக்கநடவடிக்கை எடுக்க வேண்டும் என பிரதேச மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (202-70)

## நல்லூர் பிரதேச சபைக்குட்பட்ட சனசமூக நிலையங்களுக்கு உதவி

கரவெட்டி,ஜூன்15

நல்லூர் பிரதேச சபைக்கு உட்பட்ட சனசமூக நிலையங்களுக்கு 2006ஆம் ஆண்டிற்கான அரசாங்க உதவி நன்கொடைப்பணம் தற்சமயம் நல்லூர் பிரதேச சபையினால் வழங்கப்பட்டு வருகிறது.

2006ஆம் ஆண்டிற்கான உரிய ஆவணங்களை சமர்ப்பித்து தமக்குரிய கொடுப்பனவுகளை எதிர்வரும் 20ஆம் திகதி புதன்கிழமைக்கு முன்னதாக உதவி நன்கொடைப் பணத்திற்கான காசோலையைப் பெற்றுக் கொள்ளுமாறும். தவறும் பட்சத்தில் 2007ஆம் ஆண்டிற்கான உதவி நன்கொடைப் பணம் வழங்கப்படமாட்டாது எனவும் பிரதேச சபையின் செயலாளர் பொ.வைரமுத்து தெரிவித்தார்.

ஏ தரம் கொண்ட நிலையங்களுக்கு தலா 1400 ரூபாவும் பி தரம் கொண்ட நிலையங்களுக்கு தலா 1100ரூபாவும் வழங்கப்படவுள்ளது.42 சனசமூக நிலையங்கள் நல்லூர் பிரதேச சபை எல்லைக்குட்பட்டமை குறிப்பிடத்தக்கது.




## அதிபர் நேர்முகப்பரீட்சை: இணையத் தளத்தில்

அச்சுவேலி,ஜூன்15

இலங்கை அதிபர் சேவை தரம் 2-11, தரம் III பதவிகளுக்கு ஆள்சேர்ப்பதற் கான நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்பட்டவர்களின் விவரங்கள் www.moe.gov.lk என்ற இணையத்தளத்தில் வெளியிடப்பட்டுள்ளன.

கல்வியமைச்சின் இந்த இணையத் தளத்தில் சகல விவரங்களையும் பார்வையிடலாம் என்று கல்வியமைச்சின் மேலதிக செயலாளர் தெரிவித்தார். (அ-1-11)

## காரைநகரில் மீன் பதனிடும் தொழிற்சாலை; 'பார்க்' நிறுவனத்தின் அனுசரணையுடன் அமைப்பு

யாழ்ப்பாணம்,ஜூன்15

காரைநகர் மீனவர்களின் நலன்கருதி மீன் பதனிடும் தொழிற்சாலை ஒன்றை அமைப்பதற்கு பார்க் நிறுவனம் திட்டமிட்டுள்ளது.

மீனவர்களால் பிடிக்கப்படும் மீன்களை சுகாதாரமான முறையில் நவீன தொழில் நுட்பத்துடன் பதனிட்டு ஏற்றுமதி செய்யும் நோக்கில் இத்தொழிற்சாலை நிறுவப்படவுள்ளது. இதற்கென பல லட்சம் ரூபா முதலீடு செய்யப்படும் என்று நிறுவனத்தின் திட்டப்பணிப்பாளர் கு.பிரபா தெரிவித்தார்.

இத்தொழிற்சாலைக்கென சில நவீன உபகரணங்களையும் நிறுவனம் வழங்கும். திட்டத்தின் செயல் பொறுப்புக்களைக் காரைநகர் அம்பாள் கடற்றொழிலாளர் கூட்டறவுச் சங்கம் பொறுப்பெடுக்கும் - என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (202-70)

## நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,ஜூன்15

யாழ்.புனித மரியன்னை பேராலய இளைஞர் உருவாக்கல் இயக்கத்தினரால் வருடம்தோறும் உயர்தர மாணவர்களுக்கு நடத்தப்பட்டு வரும் கிறிஸ்தவ மீட்டல் வகுப்பு நாளை வெள்ளிக்கிழமை முதல் மூன்று தினங்கள் காலை 8.30 மணி தொடக்கம் மாலை 4.30 மணிவரை யாழ்.மறைக் கல்வி நடுநிலையத்தில் நடத்தப்படவுள்ளது. (203)

* * *

யாழ்ப்பாணம்,ஜூன்15

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் இன்று வெள்ளிக்கிழமை காலை 7 மணிக்கு நல்லூர் நாவலர் மணி மண்டபத்தில் உதவிப் பணிப்பாளர் ய.அநிருத்தன் தலைமையில் திருவாசக முற்றோதல் நடத்தப்படவுள்ளது. (203-79)

* * *

காரைநகர் கலாநிதி ஆ.தியாகராசா மத்திய மகாவித்தியாலய நிறுவுநர் தினமும் பரிசளிப்பு விழாவும் இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு வித்தியாலய நடராஜா மண்டபத்தில் அதிபர் கா.குமாரவேலு தலைமையில் நடைபெறவுள்ளன.

யாழ்.பல்கலைக்கழக வணிகபீட முகாமைத்துவ கற்கைகள் பீடாதிபதி கே.தேவராஜா தம்பதிகள் பிரதம விருந்தினராகவும் காரைநகர் வைத்தியசாலை வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி சு.நடராசா, தீவக வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் (தமிழ்) கு.சரவணபவானந்தன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்துகொள்வர்.

யாழ்.பல்கலைக்கழக ஆங்கில விரிவுரையாளர் திருமதி வீரமங்கை யோகரத்தினம் நிறுவுநர் தின உரையை நிகழ்த்துவார். (1-73)



இலங்கை வங்கி ஸ்ரான்லி வீதிக் கிளையில் சேவையின் போது அமரத்துவமடைந்த ஆர்.சிவராமலிங்கம்,மா.சிற்சபேசன், எம்.ஏ.துரைச்சாமி ஆகியோரின் நினைவு நிகழ்வுகள் அண்மையில் திருநெல்வேலி சைவச் சிறார் நிறை வாழ்வு இல்லத்தில் நடைபெற்றன.

நிகழ்வில் வங்கியின் உதவிப் பொதுமுகாமையாளர் பி.ஏ.அருமைநாயகம் சிறுவர்களுக்கான கணக்குகளை ஆரம்பித்து சிறுமி ஒருவருக்கு வைப்புப் புத்தகத்தைக் கையளிப்பதை முதலாவது படத்திலும் - நிகழ்வில் கலந்துகொண்ட சிறுவர்களை இரண்டாவது படத்திலும் கணலாம்.

## சர்வதேச லயன்ஸ் கழக அமைச்சரவையில் சாவகச்சேரி கழக உறுப்பினர்கள் அறுவர்

யாழ்ப்பாணம்,ஜூன்15

சாவகச்சேரி லயன்ஸ் கழக உறுப்பினர்கள் ஆறுபேர் இவ்வருடம் சர்வதேச லயன்ஸ் கழக 306 பி.1 மாவட்ட அமைச்சரவையில் இணைக்கப்பட்டுள்ளனர்.

மாவட்ட [illegible] லயன் கே.பீ.முத்துக்[illegible] லயன் க.துரைராசா ஆகியோரும் -

மாவட்டத் தலைவர்களாக லயன் டாக்டர் எஸ்.எஸ்.அருளானந்தம்(சுகாதாரம்), லயன் கா.சற்குணதேவன்(வீதிப் பாதுகாப்பு) ஆகியோரும் -

பிராந்தியம் 8 இன் தலைவராக லயன் [illegible]ணியமும் வலயம் 15 இன் தலைவராக லயன் வ.ஸ்ரீபிரகாஸும் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். (202-207)

## இலவச வகுப்புகள்

யாழ்ப்பாணம்,ஜூன்15

சர்வதேச இந்துகுருமார் ஒன்றியத்தில் இலவச கல்விச் செயற்பாடுகள் கடந்த திங்கட்கிழமை ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றன.

ஆங்கிலம், சிங்களம், கணனி, வேத ஆகமம், வைதீகம், சோதிடம் ஆகிய கற்கை நெறிகள் அங்கு போதிக்கப்படுகின்றன.

கணனி, ஆங்கிலம் மற்றும் சிங்கள வகுப்புகளுக்கு வெளி மாணவர்களும் இணைத்துக் கொள்ளப்படுவர் என ஒன்றியத்தின் தலைவர் தெரிவித்துள்ளார்.

## கடும் வரட்சியால் எள் செய்கை பாதிப்பு

குடாநாட்டில் இவ்வருடம் நிலவிய கடும் வரட்சியால் நவாலிப் பிரதேசத்தில் எள் பயிர்ச்செய்கை முற்றாக அழிவடைந்துள்ளது.

ஆரம்பத்தில் விவசாயிகள் உற்சாகத்துடன் மேற்கொண்ட எள் செய்கைக்கு போதுமான மழைநீர் கிடையாமையினாலும், அதிக அளவில் நிலவிய வரட்சியினாலும் பயிர்கள் முற்றாக அழிவடைந்துள்ளன.

இதேவேளை- கட்டாக்காலி கால் நடைகளாலும் எள் பயிர்ச்செய்கை பாதிப்படைந்துள்ளது. (202-95)

## புற்றுநோயாளர் கவனத்துக்கு

யாழ்ப்பாணம்,ஜூன்15

கொழும்பு இராமகிருஷ்ண மிஷனால் வறுமைக்கோட்டிக் கீழ் உள்ள புற்றுநோயாளுக்கு கடந்த 9ஆம் திகதி யாழ். போதனா வைத்தியசாலை தாதியர் பயிற்சிக் கல்லூரியில் வைத்து போசாக்கு உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன.

இவற்றைப் பெறத் தவறியவர்கள் உரிய ஆவணங்களுடன் யாழ். போதனா வைத்தியசாலை புற்றுநோய் சிகிச்சைப் பிரிவில் சென்று பெற்றுக்கொள்ளுமாறு கொக்குவில் இராமகிருஷ்ண சமித்தியினர் கேட்டுள்ளனர். (203)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மீண்டும் தேசிய மட்ட சாதனையில் யாழ்.இந்து ஆரம்ப பாடசாலை



**செல்வி க.சரணிகா**

அவர்கள் அகில இலங்கைத் தமிழ் மொழித் திறன் 2006 பேச்சுப்போட்டி பிரிவு -I இல் முதல் இடத்தைப் பெற்றமைக்காகப் பாராட்டி, மேலும் பல உயர்வுகளைப் பெற வாழ்த்துகின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
பழையமாணவர் சங்கம்.

(சி/52661)

## வாழ்த்துகின்றோம்



பருத்தித்துறை விநாயக முதலியாரின் நாகலிங்க முதலியாரின் பேரனின் பேரன்

**விநாயகம் சிங்காரவடிவேல் தங்கவேலாயுதம்**

(ஆதாரவைத்தியசாலை பருத்தித்துறை TO / PS)

கட்டடத்திணைக்களத்திலும் சுகாதாரத் திணைக்களத்திலும் தொழிநுட்ப வியலாளராய் நீர்வடிகால் அமைப்புப் பகுதி மேற்பார்வையாளராக இருந்து அரச பொதுச் சேவைக்கு ஆற்றிய பணிக்காக அறுபதாவது வய ல் ஒய்வுபெறும் இவரை என்றும் பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றோம்.

நண்பர்கள், உத்தியோகத்தர்கள், ஊழியர்கள், (61684)
ஆதாரவைத்தியசாலை, பருத்தித்துறை.

## சேவைநலன் பாராட்டு விழா



தென்மட்டுவில்
கிராம உத்தியோகத்தர் J/310

**திரு.வே.கந்தையா**

அவர்களின் சேவைநலன் பாராட்டு விழா
இன்று (15.06.2007)
வெள்ளிக்கிழமை பி.ப. 2.30இற்கு
தேனொளி மாதர் மன்றத்தில் நடைபெறும்.
அனைவரையும் அன்புடன்
அழைக்கின்றோம்.

மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி.
(61696)

கிராம அபிவிருத்திச் சங்கம்,
கதிரொளி அபிவிருத்திச் சங்கம்,
தேனொளி மாதர் சங்கம்.

## காணவில்லை



அல்வாய் தெற்கு, ''நட்சத்திரபவனம்'' என்னும் முகவரியைச் சேர்ந்த **திரவியம் விஜயகுமார்** செவ்வாய்க்கிழமை மு.ப. 10 மணியிலிருந்து காணாமல் போயுள்ளார். இவர் வாகனத் திருத்துநர். இவர் கடைசியாக நீலநிற ரீசேட்டும், பச்சைநிற சாரமும் அணிந்திருந்தார்.

இவரைக்காண்பவர்கள் அருகாமையில் உள்ள பொலீஸ் நிலையத்திலோ அல்லது அவரது இருப்பிடமான ''நட்சத்திர பவனம்'', அல்வாய் தெற்கு, அல்வாய் என்னும் முகவரிக்கோ தகவல் தந்து உதவுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

தகவல் தருவோருக்கு தக்க சன்மானம் வழங்கப்படும்.

அ.திரும்புகழ்ராசா, நித்தியகல்யாணி,
கரணவாய் கிழக்கு, கரவெட்டி.
தொ.பே.021 226 4001

குடும்பத்தினர்.

(சி/52659)

## மரண அறிவித்தல்கள்

### குமாரசுவாமி சந்திரகுமார்

(இளைப்பாறிய தொழில்நுட்ப உத்தியோகத்தர், நீர்ப்பாசனத் திணைக்களம்)

கொக்குவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட குமாரசுவாமி சந்திரகுமார் (13.06.2007) புதன்கிழமை மாலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சு.குமாரசுவாமி (Shell Co.) -சிவஞானம் தம்பதியரின் ஏகபுதல்வனும், சாவித்திரி தேவியின் (ஆங்கில ஆசிரியை – கொக்குவில் ஸ்ரீ ஞானபண்டித வித்தியாசாலை) அன்புக் கணவருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (14.06.2007) வியாழக்கிழமை பிற்பகல் ஒருமணிக்கு ஊரெழு கிழக்கில் நடைபெற்றன. இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

முன்பள்ளி ஒழுங்கை,
ஊரெழு கிழக்கு.

(சி/52662)

தகவல் :-
மனைவி.

### திருமதி றோஸ் மிலிசியா ஏபிரகாம்

பாண்டியன் தாழ்வைப் பிறப்பிடமாகவும் கொழும்பில் வசித்தவருமாகிய திருமதி றோஸ் மிலிசியா ஏபிரகாம் 13.6.2007 புதன்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அன்ரனி யோன் ஏபிரகாம் அவர்களின் அன்பு மனைவியும் குவின்ரஸ், லூஷன், றுபினஸ், ஷெல்டன் ஆகியோரின் பாசமிகு அன்னையும் காலஞ்சென்றவர்களான நொயல், டேய்சி, கிறேஸ் ஆகியோரின் சிறிய தாயும் சுகிர்தா, சக்தி, யோசப்பின், இந்திராணி, அல்பேட், காலஞ்சென்ற பேனாட், சாந்தி ஆகியோரின் மாமியும் அருட்திரு திமோதி, அன்ரன், றூஸ்வெல்ட், றொஸ்வெல், சீசா, கீத், கெனத், றோய், பிரபாத், றோஜர் ஆகியோரின் பேத்தியுமாவார்.

அன்னரின் பூதவுடல் கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு நாளை (16.06.2007) சனிக்கிழமை மாலை 4மணிக்கு கல்கிசை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :-
குவின்ரஸ் (மகன்).

(61673)

## புதிய சித்திரத் தேர் சிறப்பிதழ் வெளியீடு

மீசாலை வடக்கு தட்டான்குளம் திருநீலகண்டப் பிள்ளையார் ஆலய புதிய சித்திரத் தேர் சிறப்பிதழ் வெளியிட்டு வைக்கப்பட்டுள்ளது. கடந்த 10ஆம் திகதி ஆலயப் புதிய சித்திரத் தேர் வெள்ளோட்ட விழா இடம் பெற்றது. அதன்போதே இது வெளியிட்டு வைக்கப்பட்டது.

அத்துடன் சித்திரத்தேர் வெள்ளோட்டத்தையடுத்து ஆலய மண்டபத்தில் சிற்பாசாரியார் எஸ்.பாலச்சந்திரன் , ஆலய பிரதம குருக்கள் சிவஸ்ரீ சோமஸ்கந்தக் குருக்களால் பொன்னாடை போர்த்துக் கௌரவிக்கப்பட்டார்.

இந்நிகழ்வு ஆலய பரிபாலன சபைத் தலைவர் ந.பாலச்சந்திரன் தலைமையில் நடைபெற்றது. சிறப்பிதழின் முதல் பிரதியை வர்த்தகர் பொ.கனகரத்தினம் பெற்றுக்கொண்டார்.

(203-151)

**KENNEDY**

TYPE - HP - 10, R.PM - 1000

3 கே.வி டைனமோ, டீசல் எஞ்ஜின்
இரண்டு கோஸ் பாத் செற்
ஐஸ் பழம் தயாரிப்பதற்குரியது.

NO.88, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
(61695) தொ.பே. 0776179090

## தவறிவிட்டது

கந்தையா வரதராஜா என்பவரது தேசிய அ.அட்டை (643290740 V) 11.06.2007 அன்று மருதனார்மடத்தில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் ச.நிமலன் (ஆசிரியர்), யாழ். இந்துக்கல்லூரி என்னும் முகவரியில் ஒப்படைத்துதவவும்.

(61697) தொ.பே. 021 222 3621.

## பெயர் மாற்றம்

காந்தி ஜயந்தினி என இதுவரை அழைக்கப்பட்ட நான் இன்று தொடக்கம் (14.06.2007) காந்தி அஜந்தினி எனப் பெயரை மாற்றி உள்ளேன் என்பதை இத்தால் சகலருக்கும் அறியத்தருகின்றேன்.

கா.அஜந்தினி.
(61683)

## கல்வி

A/L இரசாயனவியல் Chemistry Paper Class and Theory Class ஆசிரியரால் B.Sc., M.Sc. (Chemistry) தனியாகவோ குழுவாகவோ வீடு வந்து கற்பிக்கப்படும்.
[இணுவில், மானிப்பாய், கோக்குவில், யாழ்ப்பாணம்].
(61676) தொடர்பு: T.P.: 0776006579

## திருமண சேவை

எம்மிடம் உள்நாட்டு, வெளிநாட்டு, பலதரப்பட்ட இன, மத, சாதாரண மணமக்கள் முதல் உயர்பதவியில் உள்ளவர்கள் வரை இருக்கிறார்கள். பொருத்தமான வாழ்க்கைத் துணையைச் தேர்ந்தெடுக்க தொடர்பு கொள்ளுங்கள்.

சிந்துஜன்
T.P. 0776184434 (61681)

## மணமக்கள் தேவை

யாழ்.இந்து கௌரவகுடும்பம், 1971 இல் பிறந்த பூரம் 3ஆம் பாதம், கிரகபாவம் 40, 8 இல் செவ்வாய், கனடாவில் குடியுரிமையுள்ள பிரபல தொழிலதிபருக்கு (மணமகன் கொழும்பு வந்துள்ளார்) படித்த அழகிய மணமகளும், யாழ்.இந்து கௌரவ குடும்பம், 1983இல் பிறந்த, 8இல் செவ்வாய், மிருகசீரிடம் 2 ஆம் பாதம், கிரகபாவம் 33, உடைய லண்டனில் குடியுரிமையுள்ள மணமகளுக்கு A/L படித்த ஆங்கில அறிவுள்ள மணமகனும் தேவை.

தொடர்பு: சிந்துஜன்
T.P. 0776184434 (61652)

## முக்கிய அறிவித்தல்

### பல்துறைசார் இலவச மருத்துவ முகாம்

காலம் :- 17-06-2007ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை
நேரம் :- காலை 8 மணி தொடக்கம்
இடம் :- சாவகச்சேரி மாவட்ட வைத்தியசாலை

இந்த இலவச மருத்துவ முகாமில் சத்திரசிகிச்சை மருத்துவம், பெண்நோயியல், மகப்பேற்றியல், குழந்தை மருத்துவவியல், சர்மநோயியல், இருதயநோயியல், சலரோகம் சார் மருத்துவர்கள் கலந்துகொண்டு சிகிச்சையும், ஆலோசனையும் வழங்கவுள்ளனர். அத்துடன் இரத்த அழுத்தசோதனைகள் மற்றும் சிறுநீர், இரத்த சோதனைகள், உடல் உறுப்பு சோதனைகள் என்பனவும் மேற்கொள்ளப்படவுள்ளன.

எனவே பயன் பெறவிரும்புபவர்கள் தவறாது கலந்துகொண்டு பயன்பெறுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

மாவட்ட வைத்தியசாலை பொறுப்பதிகாரியும்,
மாவட்ட வைத்தியசாலை அபிவிருத்திச்சபையும்
சாவகச்சேரி.

(சி/52669)

## இலங்கை மின்சார சபை - யாழ்.பிரதேச அலுவலகம் மின்தடை பற்றிய அறிவித்தல்

கீழ்க்குறிப்பிடப்படும் இடங்களில் அவசர திருத்தவேலைகளைச் செய்யும் பொருட்டு 16-06-2007 சனிக்கிழமை காலை 8 மணிமுதல் மாலை 4 மணிவரை மின்சார விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்பதை மின்பாவனையாளர்களுக்கு அறியத்தருகின்றோம். வேலைகள் முன்னதாக முடிவுற்றால் குறிப்பிடப்பட்டுள்ள நேரத்திற்கு முன்பும் மின்சாரம் வழங்கப்படலாம் என்பதைக் கவனத்தில் கொள்ளவும்.

இணுவில், உடுவில், மருதனார்மடம், தாவடி, குளப்பிட்டி, ஆனைக்கோட்டை, காக்கைதீவு, நவாலி, மானிப்பாய், பொற்பதி, சங்குவேலி.

இதனால் மின்பாவனையாளர்களுக்கு ஏற்படும் அசௌகரியங்களுக்கு மனம் வருந்துகின்றோம்.

பிரதேச மின் பொறியியலாளர்,
இலங்கை மின்சார சபை,
யாழ்.பிரதேச அலுவலகம்,
சுன்னாகம்.
14.06.2007

''சூழல் மற்றும் அபிவிருத்தி வேலைகளுக்கு கைகொடுக்கும்''
இலங்கை மின்சார சபை.

(சி/52667)

யாழ். குடாவில் முதன் முறையாக அறிமுகமாகின்றது....!

**PMC** யின்

***Master Of English - VCD System***

''வீட்டிலிருந்தே இலகுவாக ஆங்கிலத்தில் பேசுவதற்கான 30 நாள் பயிற்சி'' ஆங்கிலம் கற்க நேரமில்லை என ஏங்கும் தொழில் புரிபவர்கள், மாணவர்கள், ஆங்கிலம் கற்க நேரமில்லாத இல்லத்தரசிகள், வகுப்பறையில் சேர்ந்து கல்விகற்க கூச்சமுள்ள பெரியோர்கள், இளைஞர், யுவதிகள் அனைவரும் வீட்டில் இருந்தபடியே VCD பார்த்து 30 நாள்களில் சரளமாக ஆங்கிலம் பயில ஒரு சிறந்த திட்டம்.

முற்பதிவுகள் நடைபெறுகின்றன.

முற்பதிவு செய்தவர்களுக்கே பிரதிகள் வழங்கப்படும்.

மேலதிக விவரமறிய: தலைமையகம்

**PMC**

443, ஸ்ரான்லி வீதி, அத்தியடி, யாழ்ப்பாணம்.

PMC நல்லூர் முகவர் : கமல்கண்ணன் திருமணசேவை,
171/7, மனோன்மணி அம்மன் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

(61687)

## அரசாங்க அறிவித்தல்

### தேருநர் பதிவேடுகள் திருத்தம் - 2007

1980ஆம் ஆண்டின் 44ஆம் இலக்க தேருநர்களைப் பதிவுசெய்தல் சட்டத்தின் 12 (1)ஆம் பிரிவின்படி 2007ஆம் ஆண்டிற்குரிய யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்திற்கான தேருநர் பதிவேடுகள் திருத்தம் ஆரம்பமாகிவிட்டதென்று இத்தால் அறிவித்தல் கொடுக்கப்படுகின்றது.

(2) தற்சமயம் நடைமுறையிலிருக்கும் 2006ஆம் ஆண்டு தேருநர் பதிவேடுகளின் பிரதிகள் அல்லது அவற்றின் பாகங்கள் பதிவும் அலுவலரால் கீழ்க்காணும் அலுவலகங்களில் பார்வைக்கு வைக்கப்படும்.

| காட்சிக்கு வைக்கப்பட்டிருக்கும் இடம் | காட்சிக்கு வைக்கப்பட்டிருக்கும் தேருநர் இடாப்பும், அல்லது அவற்றின் பாகங்களும் |
|---|---|
| 01. மாவட்ட தேர்தல்கள் அலுவலகம் | யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்திற்கான தேருநர் இடாப்புகளின் பிரதிகள் அனைத்தும் |
| 02. பிரதேச செயலகம்/ உதவி அரசாங்க அதிபர் அலுலகம் | பிரதேச செயலகப் பிரிவு அடங்கிய பகுதியிலுள்ள வாக்காளர்களின் பெயர்கள் அடங்கிய தேருநர் இடாப்பின் பாகங்கள் |
| 03. மாநகர/ நகர/ பிரதேச சபை அலுவலகங்கள் | ஒவ்வொரு மாநகர சபைகள், நகர சபைகள், பிரதேச சபைகள் அடங்கிய பகுதியினுள் வதியும் எல்லா வாக்காளர்களினதும் பெயர்கள் அடங்கிய தேருநர் இடாப்பின் பாகங்கள் |
| 04. ஒவ்வொரு கிராம அலுவலர்களின் அலுவலகம் | ஒவ்வொரு கிராம அலுவலர் பிரிவிற்குள் வசிக்கும் எல்லா வாக்காளர்களினதும் பெயர்கள் அடங்கிய தேருநர் இடாப்பின் பாகங்கள் |

(3) ஏதாவதொரு வாக்கெடுப்புப் பிரிவில் ஒரு வாக்காளராகப் பதிவதற்குத் தகுதியுள்ள ஒவ்வொருவரும் தமது பெயர் வாக்காளர் இடாப்பில் பதியப்பட்டிருக்கின்றதா என்று மேலே குறிப்பிட்ட அலுவலகங்களில் பொதுமக்களின் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள வாக்காளர் இடாப்புக்களைப் பார்வையிடுவதன் மூலம் நிச்சயப்படுத்திக்கொள்ளமுடியும்.

(4) வாக்காளர் இடாப்பை அல்லது அதன் பொருத்தமான பாகத்தை பரிசீலனை செய்து தமது பெயர் அவ்விடாப்பில் பதியப்படவில்லை எனக் காணும் ஒவ்வொருவரும், 2007ஆம் ஆண்டு ஜூன் மாதம் 1ஆம் திகதி 18 அல்லது அதற்கு மேற்பட்ட வயதினையுடைய ஒவ்வொருவரும் தத்தமது பகுதி கிராம அலுவலரிடம் 2007ஜூன் மாதம் 20ஆம் திகதி முதல் 2007 ஜூலை மாதம் 20ஆம் திகதி வரையும் இவற்றுக்கான விண்ணப்பங்களைப் பெற்று பூரணப்படுத்தி அவற்றினை உடன் மீள கிராம அலுவலரிடம் ஒப்படைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள்.

தேர்தல்கள் அலுவலகம்,
மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம். (சி/52658)

பதியும் அலுவலர்,
தேர்தல் மாவட்டம் இல.10, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஜனாதிபதி ஜெனிவா பயணம்

கொழும்பு,ஜூன் 15

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு நேற்றுமுன்தினம் காலை சுவிற்ஸர்லாந்து பயணமானார்.

சுவிற்ஸர்லாந்து , ஜெனிவாவில் நடைபெறவிருக்கின்ற 96 ஆவது சர்வதேச தொழிலாளர் சம்மேளனக்கூட்டத்தில் கலந்து கொண்டு ஜனாதிபதி உரையாற்றுவார்.

இந்த விஜயத்தின்போது அகதிகளுக்கான ஐ.நாவின் ஆணையாளரை ஜனாதிபதி சந்தித்துப் பேச்சு நடத்துவார் என்று ஜனாதிபதியின் ஊடகப் பணிப்பாளர் சந்திரபால லியனகே தெரிவித்தார். (சி)

# நாட்டில் சிங்களவர்களுக்கு இருக்கும் உரிமைகள் தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களுக்கும் உண்டு

## அனைவரும் இந்தியாவில் இருந்து வந்தவர்களே என்கிறார் திஸநாயக்க எம்.பி.

கொழும்பு, ஜூன் 15

''தமிழர்களுக்குத் தாய்நாடு வேண்டுமென்றால் அவர்கள் தென்இந்தியாவிற்குப் போகட்டும் என்று ஜாதிக ஹெலஉறுமய கட்சி கூறுகிறது. அவர்களுக்கு நான் ஒன்று சொல்கின்றேன் தமிழர்கள், முஸ்லிம்கள் மட்டுமல்ல சிங்களவர்களும் தென்இந்தியாவில் இருந்து வந்தவர்களே. இலங்கையில் சிங்களவர்களுக்கு இருக்கும் அனைத்து உரிமைகளும் தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களுக்கும் இருக்கின்றன''

- இவ்வாறு ஐ.தே.கட்சி தேசிய அமைப்பாளர் எஸ்.பி. திஸநாயக்கா தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கூறியதாவது:-

கொழும்பிலிருந்து பலாத்காரமாகத் தமிழ் மக்களை வெளியேற்றியமை அரசின் மிலேச்சத்தனமான செயலை எடுத்துக் காட்டியுள்ளது. இதனை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியும் பாதுகாப்பு அமைச்சருமான மஹிந்த ராஜபக்ஷவுக்குத் தெரியாமல் இச்சம்பவம் இடம்பெற்றது என ஜனாதிபதி செயலகம் தெரிவித்திருக்கின்றது.

பிரதமர் தமிழ் மக்களிடம் மன்னிப்புக் கோரியதை பாராட்டுகின்றோம். இழைக்கப்பட்ட தவறுக்கான பொறுப்பையும் அவர் ஏற்றுக்கொண்டிருப்பதைச் சுட்டிக்காட்டுகின்றோம்.



அதேசமயம், சிறுபான்மைச் சமூகத்தைச் சேர்ந்த ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே பிரதமரின் கருத்தை மறுத்திருக்கிறார். இதன் மூலம் அவர் தனது சமூகத்துக்கு ஒரு பெரும் துரோகத்தை இழைத்துவிட்டார்.

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் அரசயாப்பை மீறிச் செயற்படும் அதேசமயம், சர்வ தேசத்தை விமர்சிப்பதற்கும், ஐரோப்பிய ஒன்றியத்துக்கு எதிராகக் குரல் கொடுப்பதற்கும் அவர் யார்? அவர் அரசிடம் ஊதியம் பெறும் ஒரு சாதாரண அரச அதிகாரி. இவருடைய கருத்துக்களால் சர்வதேசம் இலங்கையைத் தவறாக எடைபோட்டுள்ளது:

அரச யாப்புக்கு எதிராகச் செயற்படும் கோத்தபாயவுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கத் தவறினால் நாட்டின் சட்டமும் ஒழுங்கும் சீர் குலைந்துவிடும். - என்றார். (சி)

**மனித உரிமைகள் மீறல்**

# சர்வதேச நிபுணர்குழு அறிக்கையை பகிரங்கப்படுத்துமாறு கோரிக்கை

கொழும்பு,ஜூன் 15

மனித உரிமைகள் குறித்து விசாரிப்பதற்கு நியமிக்கப்பட்ட ஜனாதிபதியின் ஆணைக்குழுவின் செயற்பாடுகள் குறித்து கண்காணிக்கும் சர்வதேச நிபுணர்குழு சமர்ப்பித்துள்ள அறிக்கை பகிரங்கப்படுத்தப்பட வேண்டும் என்று மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் கோரிக்கை விடுத்துள்ளது.

மேற்படி சர்வதேச நிபுணர்குழு கடந்த முதலாம் திகதி தனது முதலாவது இடைக்கால அறிக்கையை ஜனாதிபதியிடம் சமர்ப்பித்தது.

மனித உரிமை மீறல்கள் தொடர்பான 16 முக்கிய பிரச்சினைகள் தொடர்பாக ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட ஆணைக்குழு புலனாய்வுகளையும் விசாரணைகளையும் நடத்தி வருகின்றது. இந்த விசாரணைகளைச் சர்வதேச நிபுணர்கள் குழு அவதானித்து வருகின்றது. இக்குழு ஜனாதிபதியிடம் கையளித்துள்ள இடைக்கால அறிக்கை போன்ற ஆவணங்களை பகிரங்கப்படுத்துவதின் மூலம் ஜனாதிபதி ஆணைக்குழுவின் புலனாய்வு மற்றும் விசாரணைகள் குறித்து மக்களின் நம்பிக்கையைப் பெறமுடியும் என்று மாற்றுக் கொள்கைகளுக்கான மத்திய நிலையம் தெரிவித்துள்ளது. (ப)

## விளையாட்டு விழா

யாழ்ப்பாணம்,ஜூன்15

திருநெல்வேலி ஞானக்குழந்தை இல்லபாலர் பாடசாலையின் விளையாட்டு விழா நாளை சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு கந்தர்மடம் சைவப் பிரகாச வித்தியாசாலையில் இடம்பெறவுள்ளது.

பாடசாலை ஆசிரியை திருமதி பி.றயினி தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறை முதுநிலை விரிவுரையாளர் திருமதி நாச்சியார் செல்வநாயகம் கலந்துகொள்வார். (203-111)

# பட்டினியால் வாடும் யாழ்.தமிழர்களுக்கு தமிழக அரசு விரைந்து உதவவேண்டும்

## தொல். திருமாவளவன் கோரிக்கை



சென்னை,ஜூன்15

பட்டினியால் வாடும் யாழ்ப்பாணத் தமிழர்களைக் காப்பாற்ற உணவு மற்றும் மருந்துகளை உடனடியாக தமிழக அரசு அனுப்பவேண்டும் என விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் பொதுச் செயலாளர் தொல். திருமாவளவன் கோரிக்கை விடுத்துள்ளார்.

இலங்கை வாழ் தமிழர்களுக்கு எதிராக சிங்கள அரசு மேற்கொண்டுவரும் வன்முறைகளைக் கண்டித்து கட்சியின் சார்பில் சென்னை ஆட்சியர் அலுவலகம் அருகில் நேற்றுமுன்தினம் கண்டன ஆர்ப்பாட்டம் ஒன்று நடத்தப்பட்டது.

ஆர்ப்பாட்டத்தைத் தொடர்ந்து நடைபெற்ற கூட்டத்திற்குத் தலைமை வகித்து உரையாற்றும்போதே அவர் இக்கோரிக்கையை விடுத்தார்.

தொல். திருமாவளவன் மேலும் கூறியதாவது:-

இலங்கை வாழ் தமிழர்களுக்கு எதிராக சிங்கள இன வெறியாட்டத்தைத் தடுத்து நிறுத்த வேண்டும். ஈழத் தமிழர்களுக்கு எதிராக இலங்கை அரசுக்கு எந்த உதவிகளையும் இந்திய அரசு செய்யக்கூடாது.

பழநெடுமாறன் தலைமையில் சேகரிக்கப்பட்டுள்ள ஒருகோடி மதிப்புள்ள உணவு மற்றும் மருந்துப் பொருள்களை செஞ்சிலுவைச் சங்கத்தின் மூலம் யாழ்ப்பாணத்திற்கு அனுப்பிவைக்க மத்திய அரசு அனுமதி வழங்கவேண்டும்.

தமிழ்த் தேசிய உணர்வு உள்ளவர்கள் அனைத்துக் கட்சிகளுடன் இணைந்து தமிழர்கள் வலுக்கட்டாயமாக வெளியேற்றப்படுவதைக் கண்டித்துப் போராட்டம் நடத்துவோம். முதலமைச்சரைச் சந்திக்கும் போது இந்தப் பிரச்சினையை வலியுறுத்துவேன் - என்றார்.

# இணைத் தலைமை நாடுகளின் கூட்டம் 25, 26ஆம் திகதிகளில்

கொழும்பு, ஜூன்15

இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் இணைத் தலைமை நாடுகளின் கூட்டம் ஒன்று இம்மாதம் 25ஆம், 26ஆம் திகதிகளில் ஒஸ்லோவில் நடைபெறவுள்ளது.

அமெரிக்கா, ஜப்பான் மற்றும் ஐரோப்பிய யூனியன் பிரதிநிதிகளுடன் நோர்வே அமைச்சர் எரிக் சொல்ஹெய்ம் மற்றும் சமாதானத் தூதுவர் ஜோன் ஹன்சன் போவர் ஆகியோரும் இக்கூட்டத்தில் கலந்துகொள்ளவிருக்கின்றார்கள். தீர்க்கமான முடிவுகள் எடுப்பதற்கான விடயங்கள் எதுவும் இக்கூட்டத்தில் விவாதிக்கப்படாது என்றும் இலங்கையில் இப்பொழுது நிலவும் மனித உரிமை மீறல்கள் முக்கியமாக விவாதிக்கப்படும் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது. (அ-ப)

## சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம்,ஜூன்15

வட்டுக்கோட்டை சங்கரத்தை பத்திரகாளி அம்பாள் ஆலய பெருந்திருவிழா கடந்த புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

தொடர்ந்து பத்து தினங்கள் திருவிழா நடைபெறும். (203)

* * *

காரைநகர்,ஜூன்15

காரைநகர் பண்டத்தரிப்பான் புலம் சிதம்பரேஸ்வர சுவாமி ஆலய பெருந்திருவிழா கடந்த புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி இடம்பெற்று வருகின்றது.

பெருந்திருவிழாவின் பஞ்சரத பவனி எதிர்வரும் 21ஆம் திகதி வியாழக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கும், மறுநாள் வெள்ளிக்கிழமை அதிகாலை 3 மணிக்கு நடேசர் அபிஷேகமும் 8 மணிக்கு தீர்த்தோற்சவமும் இடம்பெறும். (203-73)

* * *

வலி.வடக்கு,ஜூன்15

மல்லாகம் நீலியம்பனை ஸ்ரீ முதலி அம்பாள் ஆலய சங்காபிஷேகம் நாளை சனிக்கிழமை காலை இடம்பெறவுள்ளது.

கடந்த பன்னிரண்டு நாள்கள் இடம்பெற்ற மண்டாலாபிஷேகத்தைத் தொடர்ந்து நாளை சங்காபிஷேகம் இடம்பெறுகின்றது. (202-68)

**கொழும்பில் நடைபெற்ற தேசிய மட்ட தமிழ்த்தினப் போட்டி**

# யாழ்.மாவட்டத்தில் இருந்து பங்குற்றிய ஒன்பது பிரிவுகளும் வெற்றிபெற்றன

நல்லூர்,ஜூன்15

கொழும்பில் அண்மையில் நடைபெற்ற கடந்த வருடத்துக்கான தேசிய மட்ட தமிழ்த் தினப் போட்டிகளில் யாழ். மாவட்டத்திலிருந்து கலந்துகொண்ட ஒன்பது பிரிவுகளும் வெற்றிபெற்றுள்ளன.

இதில் எட்டு முதலிடங்களும் ஒரு இரண்டாமிடமும் கிடைத்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

அவற்றின் விவரங்கள் வருமாறு:-

**குழுப்போட்டி**

- வில்லுப்பாட்டு - முதலாமிடம் - தெல்லிப்பழை யூனியன் கல்லூரி.
- விவாதம் - முதலாமிடம் - யாழ். மத்திய கல்லூரி.
- நாட்டிய நாடகம் - இரண்டாமிடம் - இராமநாதன் கல்லூரி

**தனிப்போட்டி**

- நடனம் - பிரிவு I - முதலாமிடம் - வேம்படி மகளிர் கல்லூரி.
- நாடகம் - பிரிவு III - முதலாமிடம் - இராமநாதன் கல்லூரி.
- பாஒதல் - முதலாமிடம் - மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை.
- பேச்சு - பிரிவு I - முதலாமிடம் - யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை.
- இசையும் அசைவும் - பிரிவு I - முதலாமிடம் - கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை.

(203-111)



நவாலி வடக்கு தேற்றா மரத்தடி ஞானவைரவர் ஆலய சகஷ்ர நாம சங்காபிஷேகம் அண்மையில் நடைபெற்றது. சீரணி அம்மன் ஆலயகுரு சிவஸ்ரீ சண்முகக் குருக்கள் தலைமையில் சங்காபிஷேகம் இடம்பெற்றது. அதற்கு முன்னர் உள்வீதியில் பிரதான கும்பம் எடுத்துவரப்படுகிறது. ஆலயத்தின் அறங்காவலர் சி.இராஜேஸ்வரன் தம்பதியரும் படத்தில் காணப்படுகின்றனர்.

# நயினை நாகபூஷணி அம்மன் ஆலய பெருந்திருவிழா நாளை ஆரம்பம்



நல்லூர்,ஜூன்15

வரலாற்றுப் பெருமைமிக்கதும் அறுபத்து நான்கு சக்தி பீடங்களில் ஒன்றாகப் போற்றப்படுவதுமான நயினாதீவு நாகபூஷணி அம்மன் ஆலய பெருந்திருவிழா நாளை சனிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து திருவிழா 16 தினங்கள் நடைபெறும்.

எதிர்வரும் 20ஆம் திகதி இரவு முத்துச்சப்பரமும், 22ஆம் திகதி இரவு கைலைக்காட்சியும் 24ஆம் திகதி பகல் எழுந்தருளி அம்பாளுக்கு சாங்காபிஷேகமும் 25ஆம் திகதி பகல் சிவபூசை கைலைக் காட்சியும் அன்று இரவு திருமஞ்சமும் இடம்பெறும்.

தொடர்ந்து 26ஆம் திகதி பகல் கருட, சர்ப்ப விசேட பூசையும் வாயு பட்சணி நாகம் வீதியுலாவும் இரவு பூந்தண்டிகையும் 28ஆம் திகதி பகல் கைலைக்காட்சியும் இரவு சப்பரத் திருவிழாவும் இடம்பெறும். 29ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு தேர்த்திருவிழாவும் 30ஆம் திகதி காலை தீர்த்தத் திருவிழாவும் இரவு திருவூஞ்சல், கொடியிறக்கம் என்பனவும் இடம்பெறும். முதலாம் திகதி தெப்பத்திருவிழா இடம்பெறும்.

பக்தர்களின் நலன்கருதி வழமைபோல் இம்முறையும் போக்குவரத்துச் சேவையினர், மோட்டார் படகுச் சேவையினர், அமுதசுரபி அன்னதான சபையினர், தாகசாந்தி நிலையத்தினர், சுகாதார சேவைப்பகுதியினர், தொண்டர் சபையினர், [illegible] டிய ஒழுங்குகளைச் செய்துள்ளனர் என ஆலய பரிபாலான [illegible] தெரிவித்துள்ளனர். (203-111-95)

## பிறவிப் பெருங்கடல்

ஒருவன் ஆயிரம் பவுண்களைச் சேர்த்து வைத்திருந்தான். அழகிய இளம் மனைவி, ஐந்து வயதுப் பாலகன். இவர்களுடன் இனிது வாழ்ந்தான். மழை பொழிந்து வெள்ளம் வந்து அவன் வாழ்ந்த ஊரே வெள்ளத்தில் மூழ்கிவிட்டது. அவன் பவுண் மூடையைத் தலையிலும் மனைவியை இடது தோளிலும், மகனை வலது தோளிலும் சுமந்துகொண்டு வெள்ளத்தில் நீந்தலானான்.

மேலும் வெள்ளம் வந்துவிட்டது. இப்போது இன்னும் ஒன்றை விட்டாலன்றி நீந்தமுடியாது என எண்ணினான். மனைவியை விடுவதா? மகனை விடுவதா? என்று சிந்தித்தான்.

**ஞானக்கதிர்**

மனைவியைத் தன் விருப்பத்தால் மணந்து கொள்ளலாம். குழந்தை தெய்வங்கொடுத்தாலன்றிக் கிடைக்காது. ஆதலால் மனைவியை விட்டுவிட்டான். சுமை நீங்கிக் கரை சேர்ந்தான்.

வெள்ளம் என்பது பிறவிப் பெருங்கடல். பொன்னாசை, மனைவியாசை, மக்களாசை என்ற மூவாசையும் ஒன்றொன்றாக விட்டபின் முத்திக்கரை சேர்ந்தான். அனுபூதிக்கு ஆசைகள் தடை. ஆதலால், ஆசைகளை விட்டு முருகன் அநுபூதியைப் பெறவேண்டும்.

*நன்றி - ஞானச்சுடர்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யா/கொக்குவில் ஸ்ரீ இராமகிருஷ்ண வித்தியாசாலை, கொக்குவில்

இன்று (15-06-2007) வெள்ளிக்கிழமை ஓய்வு பெறும்

அதிபர் திரு.இரகுநாதன் சிவபாதசேகரம் அவர்களின்

# சேவை நலன் பாராட்டு



## திரு.இரகுநாதன் சிவபாதசேகரம்

PET, B.A.,Dip. in Education,SLPS

பிறப்பு :- நயினாதீவு நாகபூஷணி அம்மன் கோயில் "சாந்தி மடம்" 16-06-1947 சர்வசித்து வருடம் ஆனி மாதம் 02 ஆம் திகதி

ஆரம்பக்கல்வி :- யா/நயினாதீவு நாகபூஷணி வித்தியாசாலை

இடை நிலைக்கல்வி :- யா/நயினாதீவு மகா வித்தியாலயம், யா/ மத்திய கல்லூரி.

கல்வித்தகைமை :- கலைமாணி (B.A) - யாழ்.பல்கலைக்கழகம்

தொழில் தகைமை :- உடற்கல்வி விசேட பயிற்சி - பலாலி ஆசிரியர் கலாசாலை, பட்டப்பின் டிப்ளோமா (Dip.in.Education) - யாழ்.பல்கலைக்கழகம்

### சேவை விவரம்

01-01-1970 - 11.02.1976 - ஆசிரியர் இ/அக்கறல்லை அரசினர் தமிழ் கலவன் பாடசாலை

12.02.1976 - 31.12.1977 - ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை

01.01.1978 - 14.09.1986 - ஆசிரியர்-யா/நயினாதீவு கணேச வித்தியாசாலை, யா/நயினாதீவு மகா வித்தியாலயம்.

15.09.1986 - 31.09.1991 - ஆசிரியர் - யா/கொக்குவில் இந்துக் கல்லூரி.

01.10.1991 - 14.03.1999 -அதிபர்- யா/கோண்டாவில் சி.சி.த.க.பாடசாலை

15.03.1999 - 16.06.2007 - அதிபர் - யா/கொக்குவில் ஸ்ரீ இராமகிருஷ்ண வித்தியாசாலை

எமது பாடசாலை அதிபராகக் கடந்த எட்டு வருடங்கள் கடமையுணர்வுடனும் அர்ப்பணிப்புடனும் செயற்பட்டு வித்தியாசாலையின் வளர்ச்சிக்கும் உயர்ச்சிக்கும் உறுதுணையாக விளங்கியவர். அவர் கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்ற அணிகலன்கள் பூண்டு இன்முகத்துடன் தனக்கே உரிய பாணியில் நிறைந்த மனத்துடன் சேவையாற்றியவர். ஓய்வுபெற்றுச் சென்றாலும் அவர் பாடசாலையில் மேற்கொண்ட அபிவிருத்திப் பணிகள் அவரை நினைவு கூர்ந்து நிற்கும். ஓய்வுக் காலத்தில் தமது குடும்பத்தினருடன் மனமகிழ்ச்சியாகவும் ஆரோக்கியமாகவும் நீண்ட ஆயுளுடனும் வாழ நயினை நாகபூஷணி அம்மனின் ஆசிகளை வேண்டி நிற்கிறோம்.

ஆசிரியர் கழகம், பழைய மாணவர் சங்கம், பாடசாலை அபிவிருத்திச்சங்கம். (61642)

---

# தேவை

## தமிழ் தட்டெழுத்தாளர்/ பக்க வடிவமைப்பாளர்

கொழும்பில் இயங்கும் எமது சக நிறுவனத்திற்கு தமிழ் தட்டெழுத்தாளர்/ பக்க வடிவமைப்பாளர்கள் தேவைப்படுகின்றனர்.

★ஆண்கள் மட்டும்.

★பயிற்சிக் காலம் 6 மாதம் - சம்பளம் வழங்கப்படும்.

★பயிற்சிக் காலம் முடிய நிரந்தரமாக்கப்பட்டு தகுதிக்கேற்ப சம்பளம் உயர்த்தப்படும்.

★கொழும்பில் பாதுகாப்புடன் கூடிய தங்குமிட வசதி, உணவு வசதி செய்து தரப்படும்.

தகுதியுடையோர் 19.06.2007 செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு கீழ்க்காணும் முகவரிக்கு ஆவணங்களுடன் நேரில் வரவும். (சி/52653)

முகாமையாளர்,
லஷ்மி ஏஜென்சி, எஸ்-லோன் விநியோக நிலையம்,
4ஆவது ஒழுங்கை, 23/1, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

---

# கண்ணீர் அஞ்சலி

யா/தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியில்
ஆசிரியராகக் கடமையாற்றும்
**த.தயானந்தன்** அவர்களின் பாசமிகு தாய்
**திருமதி கெங்காமலர் தர்மபுத்திரன்**
அவர்கள் சிவபதமடைந்ததையிட்டு எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் கண்ணீர் அஞ்சலிகளையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

யா/மகாஜனக் கல்லூரி,
தெல்லிப்பழை. (61661) **ஆசிரியர் கழகம்.**

---

# துயர் பகிர்கின்றோம்



எமது நிறுவனத்தின்
சக பணியாளராகிய
**அந்தோனிப்பிள்ளை பகிரதனின்** தாய்
**அந்தோனிப்பிள்ளை மேரி கொன்செப்ரா**

அவர்கள் 13.06.2007 இறைபதம் அடைந்ததையிட்டுத் துயருறும் குடும்பத்தினரின் துயரில் நாமும் பங்கேற்பதுடன் அன்னாரின் ஆத்மசாந்திக்காகவும் பிரார்த்திக்கின்றோம்.

இயக்குநரும், பணியாளர்களும்,
கரித்தாஸ் - கியூடெக், யாழ்ப்பாணம். (C/52652)

---

# கண்ணீர் அஞ்சலி

எமது கழக நண்பன்
**ரவிச்சந்திரன்** *(ரவி)* அவர்களின் அன்புத் தாய்
**திருமதி பொன்னம்மா ஐயாத்துரை**
அவர்களின் மறைவையொட்டி துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

சம்பியன் லேன்,
கொக்குவில் கிழக்கு. (61669) **வளர்மதி நண்பர்கள்.**

---

# புதிய பிரிவுகள் ஆரம்பம்

## aat (SriLanka)

Foundation Level, Intermediate level & Final
Exam Dec. 2007 ஆரம்பம்: 17.06.2007 (Sunday)
G.C.E. (O/L) 6 PASSES Medium: English & Tamil

வாரநாள் வகுப்புகள், வார இறுதி நாள் வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன
* G.C.E. A/L மாணவர்கள் தற்போது பதிவுகளை மேற்கொள்வதன் மூலம் A/L பரீட்சை முடிந்தவுடன் விசேட வகுப்புகள் நடத்தப்பட்டு Dec 2007 பரீட்சை எடுக்க வசதி செய்து கொடுக்கப்படும்.

## வங்கியியல் கற்கைநெறிகள்
**ACBF, CBF**
ஆரம்பம் 17-06-2007 (Sunday)

## External Degree
**G.A.Q., B.A., 1st in Com., B.A. Final**
வகுப்புகளுக்கான புதிய பிரிவுகள், மீட்டல் வகுப்புகள் இடம்பெறுகின்றன.

*Further Details*
Director
**Jaffna College Undergraduat Dept.**
464, Hospital Road
(Near Commercial Bank), Jaffna.
T.P.No. 021 222 3382
(சி/52625)

---

## JAFFNA COLLEGE INSTITUTE OF AGRICULTURE

## விவசாய சான்றிதழ் பயிற்சிநெறி

நான்கு மாதகால இலவச பயிற்சிநெறி விவசாய மூலதத்துவம், பயிரியல், பூங்கனியியல், மிருகபரிபாலனம் ஆகிய பாடநெறிகளை உள்ளடக்கிய விவசாய சான்றிதழ் பயிற்சிநெறிக்கு இருபாலாரிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பதாரி க.பொ.த.சாதாரண தரப்பரீட்சையில் சித்தியடைந்திருப்பதுடன் 17-26 வயதுக்குட்பட்டிருக்கவேண்டும்.

இப்பயிற்சி நெறியில் சேரவிரும்புவோர் 20-06-2007 புதன்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறும் நேர்முகப் பரீட்சைக்கு பிறப்பு அத்தாட்சிப்பத்திரம், கல்வித்தகைமைப்பத்திரங்கள், கிராம சேவையாளரின் நற்சான்றிதழ் வேறு இரு நற்சான்றிதழ் பத்திரங்களுடன் சமுகம் அளிக்கவும். பயிற்சிநெறிக்காலத்தில் உதவுதொகை வழங்கப்படும். பயிற்சிநெறி முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.

மேலதிக விவரங்களுக்கு :

**அதிபர்,**
*யாழ்ப்பாணக் கல்லூரி விவசாய நிறுவனம்,*
*மருதனார்மடம்,*
*சுன்னாகம்.*
(61656)

---

# விற்பனைக்கு

நான்கு கம்பிகள் வைத்து அறுத்த வேலிக்குரிய கொங்கிறீற் தூண்கள், வீட்டிற்குரிய பனைமரங்கள் என்பன விற்பனைக்குண்டு.
*நா.நடேசபிள்ளை,*
*வேவில் வீதி, மட்டுவில் மத்தி.*
(61654) T.P.: 0779969077

# மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவமான குடும்பத்தைச் சேர்ந்த 1976, கார்த்திகை, கிரகபாவம் 9, கொழும்பில் பொறியியலாளராகத் தொழில் புரியும் மணமகனுக்கு பெற்றோர் தகுந்த மணமகளை எதிர்பார்க்கின்றனர்.
(61685) **தொடர்பு: 077 6745643**

# தவறிவிட்டது

பொன்னுத்துரை கிருபாகரன் அளவெட்டி, விழுவத்தனை என்னும் விலாசமுடைய தேசிய அடையாள அட்டை (782401912V) கடந்த 12.06.2007 மருதனார்மடத்திற்கும் அளவெட்டிக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து குமரகோட்டம், கோண்டாவில் மத்தி என்னும் விலாசத்தில் ஒப்படைத்து உதவுமாறு அன்புடன் வேண்டுகின்றோம். (61670)

# மணமகள் தேவை

1973ஆம் ஆண்டு பிரான்ஸ் பிரஜாவுரிமை உடைய மணமகனுக்கு பிரான்ஸில் வசிக்கும் பிராஜாவுரிமை உடைய அல்லது இல்லாத 5' 4'' இற்கு குறையாத உயரமுடைய அழகிய கௌரவ குடும்ப மணமகள் தேவை. படம், ஜாதகத்துடன் தொடர்புகொள்ளவும்.
anusuja10 @ yahoo.com
anusuja10 g mail.com
(61657) T.P.: 0776621811

# யாழ்.பொதிகள் சேவை

* விமானம் மூலமாக உடனுக்குடன் உங்கள் பொதிகள் பாதுகாப்புடன் அனுப்பி வைக்கப்படும்.
* கிளியரன்ஸ் இல்லாத பொருள்களுக்கு M.O.D எடுத்து அனுப்பப்படும்.
* 100 கிலோவிற்கு மேல் அதி விசேட விலை
* பூதவுடல்கள் ஏற்றுக்கொள்ளப்படும்
* தேவை ஏற்படின் விமானம் 'சாட்டட்' (Charted) செய்து கொடுக்கப்படும்.

EURO GROUP 011 - 4542190 077 - 3846998

# கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை ஆங்கில ஆசிரியை
**திருமதி சந்திரகுமார் சாவித்திரிதேவி**
அவர்களின் அன்புக் கணவர்
**குமாரசுவாமி சந்திரகுமார்**
அவர்கள் காலமான செய்தியறிந்து ஆழ்ந்த துயரடைகின்றோம். அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.**
யா/கொக்குவில்
ஸ்ரீ ஞானபண்டித வித்தியாசாலை. (61674)

---

# வீட்டுக்கிருத்திய அழைப்பும் பிரார்த்தனையும்



**திருமதி செல்வராசா கனகாம்பிகை**

மலர்வு 16*06*1942
உதிர்வு 16*05*2007

கடந்த 16.05.2007 புதன்கிழமை காலமான எம் குலவிளக்கு அம்மாவின் ஆத்மசாந்திப் பிரார்த்தனை இன்று (15.06.2007) வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது உடுவில் தெற்கு, பாலாவோடை இல்லத்தில் நடைபெறும். உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

*உடுவில் தெற்கு,*
*பாலாவோடை,*
*மானிப்பாய்.* (61301)

*தகவல்:*
**சுதாகரன், வசிகரன்**
*(மகன்மார்).*

---

# மரண அறிவித்தல்



**திருமதி *திலகவதி சதாசிவம்***

மட்டுவில் தெற்கு, சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி திலகவதி சதாசிவம் கடந்த (13.06.07) புதன்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (14.06.07) வியாழக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, மட்டுவில் நெணியன் இந்துமயானத்தில் பூதவுடல் தகனஞ் செய்யப்பட்டது. இந்த அறிவித்தலை உற்றார், உறவிர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*மட்டுவில் தெற்கு,*
*சாவகச்சேரி.* (61680)

*தகவல்:*
திருமதி **விக்னேஸ்வரி**
(மகள்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# காலம் தாழ்த்தி இப்போதேனும் நீதி செய்யுமா சர்வதேச சமூகம்?

இலங்கை நிலைமை குறித்து எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, கொழும்பில் உள்ள வெளிநாட்டுத் தூதுவர்களை அழைத்து விளக்கியிருக்கின்றார்.

இலங்கையில் கொலை, கொள்ளை, ஆட்கடத்தல், கப்பம் கோரல் போன்ற மனித உரிமை மீறல்கள் எல்லாம் எல்லை மீறி அதிகரித்து விட்டன. இவற்றைத் தடுத்து நிறுத்தும் நடவடிக்கையில் சர்வதேச சமூகம் உடனடியாக இறங்கவேண்டும். இல்லையேல் நிலைமை மிக மிக மோசமாகிவிடும் என எச்சரித்திருக்கின்றார் ரணில்.

இவற்றையெல்லாம் தடுப்பதற்கான நடவடிக்கையில் ஈடுபடுவதற்கு தார்மீக ரீதியான கடமையும், பொறுப்பும் சர்வதேச சமூகத்துக்கு இருப்பதாக எதிர்க்கட்சித் தலைவர் சுட்டிக்காட்ட விழைகின்றார்.

ஆனால், அதற்கு அப்பால் இத்தகைய நிலைமை இலங்கையில் ஏற்பட்டமைக்கு நேரடிப் பொறுப்பேற்க வேண்டிய கடப்பாடும் பொறுப்பும் சர்வதேச சமூகத்தையே சேர்ந்தது என்பதை நாம் சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

இலங்கையில் 2002 முற்பகுதியில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் அரசின் வருகையோடு தற்போதைய அமைதி முயற்சிகள் ஆரம்பிக்கப்பட்டன. இரண்டு தசாப்த காலக் கொடூர யுத்தத்துக்கு முடிவு கட்டும்வகையில் 'சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த' யுத்த நிறுத்தம் கூட செய்யப்பட்டது. அதனடிப்படையில் அமைதி முயற்சிகள் - சமாதான நடவடிக்கைகள் - மெல்ல மெல்ல முன் நகர்த்தப்பட்டன.

2002 பெப்ரவரியில் யுத்த நிறுத்த ஒப்பந்தம் செய்யப்பட்டாலும், அரசுக்கும் புலிகளுக்கும் இடையிலான முதலாவது நேரடி சமாதானப் பேச்சு ஏழு மாதங்கள் கழித்து செப்டெம்பர் நடுப்பகுதியில்தான் ஆரம்பமாகியது. இந்த ஏழு மாதத் தாமதத்துக்குப் பல்வேறு காரணங்கள் இருந்தன. யுத்த நிறுத்தம் நடைமுறைக்கு வந்தபோதிலும் இலங்கை இராணுவமும், கடற்படையும் புலிகளுக்கு எதிராகக் கடுமையான பகையுறவை வெளிப்படுத்தி நின்றமை, யுத்த நிறுத்த உடன்பாட்டில் இணங்கப்பட்ட விடயங்கள் நடைமுறைப்படுத்தப்படாமை போன்றவை ஒருபுறம் குழப்பத்தை ஏற்படுத்தின. மறுபுறம் தமிழ் மக்களின் சட்டரீதியான, அதிகார பூர்வப் பிரதிநிதிகளாகவும் சமத்துவப் பங்காளிகளாகவும் மட்டுமே பேச்சுகளில் பங்குபற்ற முடியும் என்ற விடுதலைப் புலிகளின் மாறாத நிலைப்பாட்டை ஏற்று அங்கீகரித்துச் செயற்பட ரணில் அரசு காலதாமதம் காட்டியமையும் மற்றைய பிரதான காரணமாகும்.

இலங்கை அரசுடன் சமத்துவப் பங்காளி - சம தரப்பு அந்தஸ்து - என்ற மாறா உறுதி நிலையுடனேயே அமைதி முயற்சிகளில் புலிகள் குதித்தனர். அந்த சமாதான எத்தனங்களுக்கு அடிப்படையாக இருந்ததே இந்த சமத்துவத் தரப்பு என்ற அங்கீகாரம்தான்.

சர்வதேச சமூகத்தின் ஈடுபாட்டுடன் முன்னெடுக்கப்பட்ட அந்த அமைதி முயற்சிகளில் புலிகளுக்கு வழங்கப்பட்டிருந்த சமத்துவப் பங்காளி என்ற அந்தஸ்தைக் குழப்பிக் கெடுத்ததன் மூலம், அந்த நன் முயற்சிகள் தகர்ந்து குட்டிச்சுவராக மூல காரணமாக அமைந்தது சர்வதேச சமூகத்தின் பொறுப்பற்ற போக்கு.

சமாதானத்தின் சர்வதேச காவலர்கள் என்ற பாத்திரத்தைத் தாங்கி வந்த உலக நாடுகள், பேச்சுக்கு அடிப்படையாக அமைந்த 'சமத்துவப் பங்காளி' என்ற நிலைப்பாட்டை குழப்பும் வகையில் அந்த அமைதி முயற்சிக் காலத்திலேயே விடுதலைப் புலிகளைப் பயங்கரவாத இயக்கமாகப் பட்டியலிட்டு, தடைசெய்து புறமொதுக்கின. சர்வ தேசத்தின் இந்த ஒதுக்கீடு - ஒருபக்கச் சார்பான நடவடிக்கை - சமாதான முயற்சிகளில் இரு தரப்புகளுக்கும் இருந்த அதிகாரச் சமநிலையை ஆழமாகப் பாதித்தது. அமைதி முயற்சிகள் அடியோடு குழம்ப வழி சமைத்தது.

இலங்கையில் இப்போது சமாதானத்தைப் புறமொதுக்கி, போர்த் தீவிரத்தில் முனைப்புக் காட்டி, மனித உரிமை மீறல்களை வழமையாக்கி, அரச பயங்கரவாதத்தைக் கட்டவிழ்த்து விட்டு, அமைதிக்கான வாய்ப்புகளுக்கு நிரந்தர ஆப்பு வைக்கும் தரப்பு உண்மையில் எது என்பதை மேற்குலகம் காலம் தாழ்த்தியேனும் இப்போது அடையாளம் காணும் சூழல் ஏற்பட்டிருக்கின்றது.

இவ்விவகாரத்தில் உண்மைகளை எடுத்தியம்ப முயலும் அமெரிக்கா, பிரிட்டன், ஐரோப்பிய ஒன்றியம் போன்ற மேற்குலக நாடுகளையே தூக்கி எறிந்து - துச்சமாக மதித்து - விமர்சிக்கும் 'தடிப்பு' நிலைக்கு உயர்ந்து மமதையோடு சூளுரைக்கின்றது கொழும்பு நிர்வாகம். அது மாத்திரமல்ல. இந்தியா, பாகிஸ்தான் உள்ளிட்ட 'சார்க்' நாடுகள் மற்றும் ஜப்பான், சீனா உட்பட்ட ஆசிய நாடுகள் தங்கள் பின்புலத்தில் இருப்பதால் அமெரிக்கா, பிரிட்டன் மற்றும் மேற்குலக நாடுகள் பற்றித் தங்களுக்குக் கவலையில்லை என மேற்கு நாடுகளைத் தூசாக மதித்துத் தூர ஒதுக்கி நையாண்டி செய்கிறது கொழும்பு.

அமைதிக் காலத்தில் - சமாதானப் பேச்சு வேளையில் - புலிகள் மீது குறைகண்டு, அவர்களைத் தடைசெய்து, சமதரப்பு அந்தஸ்தைக் குழப்பி, அதன்மூலம் அமைதி எத்தனங்களையே கெடுத்த சர்வதேச சமூகம், இப்போது கொழும்பு அரசின் இந்தக் கொடூரப் போக்குக் குறித்து - உண்மை அம்பலமான இப்போதைய சூழலில் - என்ன நடவடிக்கை எடுக்கப்போகின்றது?

முன்னர் விட்ட தனது தவறைத் திருத்தும் வகையில் - பிராயச்சித்தம் செய்யும் விதத்தில் - கொழும்பு தொடர்பாக உருப்படியான, காத்திரமான நடவடிக்கை எதையாவது சர்வதேசம் வெளிப்படுத்தி, அதன் மூலம் தமிழருக்குக் காலம் தாழ்த்தியேனும் நீதி செய்யுமா?

தமிழர்கள் உரிமையுடன் இப்பதிலுக்கு சர்வதேசத்தை எதிர்பார்த்துக் காத்திருக்கின்றனர்.

## கொழும்பிலிருந்து தமிழர் வெளியேற்றம்:

# பிரதமரின் அறிக்கையை கண்ணீர் சிந்தி வாசித்தாராம் நீதித்துறை அமைச்சர்!



கொழும்பு விடுதிகளில் தங்கியிருந்த தமிழர்கள் பலவந்தமாக வெளியேற்றப்பட்டமைக்கு கவலை தெரிவித்து பிரதம மந்திரி ரட்ணசிறி விக்கிரமநாயக்க விடுத்திருந்த அறிக்கையைத் தாம் கண்ணீர் சிந்தியபடி வாசித்ததாக நீதி அமைச்சர் டிலான் பெரேரா தெரிவித்துள்ளார்.

பிரதம மந்திரிக்கு அமைச்சர் டிலான் பெரேரா எழுதியுள்ள கடிதத்தில் பிரதம மந்திரி பாதிக்கப்பட்ட மக்களிடம் தயக்கமின்றி, மன்னிப்புக் கோரியிருப்பதன் மூலம் எமது அரசுக்கு புதிய பரிமாணம் ஒன்றைக் கொண்டுவந்திருக்கிறார். சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மூலாதாரக் கொள்கைகளை மீளவும் நிலைநிறுத்தியுள்ளனர் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

சமீபகால மனித உரிமை அத்துமீறல்கள் குறிப்பாக தமிழர்கள் பலவந்தமாக வெளியேற்றப்பட்டமை மற்றும் செஞ்சிலுவைச் சங்க பணியாளர் இருவர் கொல்லப்பட்டமை போன்றவற்றுக்கு மன்னிப்பு கேட்டு விடுக்கப்பட்டிருந்த அறிக்கையைக் கண்ணீர் சிந்தியபடி வாசித்தேன். எமக்கு அவமதிப்பை ஏற்படுத்துவதற்காக இக் காரியங்கள் செய்யப்பட்டிருந்த போதிலும், அரசாங்கம் என்ற முறையில் இதற்கு நாம் பொறுப்பெடுத்தாக வேண்டும்.

நாட்டின் எந்தப் பகுதி மக்கள் கொடுமைப்படுத்தப்பட்டாலும் அல்லது அவர்களது மனித உரிமைகள் மீறப்பட்டாலும் நாம் கவலைப்பட வேண்டிய விடயமாகும். அது நீங்கள் எமது ஆதாரக் கொள்கைகளை மீளவும் நிலைநாட்டியுள்ளீர்கள், எமது அரசுக்குப் புதிய பரிமாணம் ஒன்றை ஏற்படுத்தியுள்ளீர்கள் - என்று அமைச்சர் டிலான் பெரேரா பிரதமருக்குத் தாம் எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். (அ-ப)

# கோத்தபாயாவின் குற்றச்சாட்டு எந்தவித அடிப்படையுமற்றது

### ஐ.நா.பணிகளை பாதிக்கும் என்று வதிவிடப் பிரதிநிதி கவலை

கொழும்பு,ஜூன் 15

கொழும்பிலுள்ள ஐ.நா. நிறுவனத்தின் அலுவலக பணியாளர்கள் மீது பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ அடிப்படையற்ற விதத்தில் குற்றச்சாட்டுக்களை சுமத்தியுள்ளார் என்று கவலை தெரிவிக்கப்பட்டுள்ளது.

சில தினங்களுக்குமுன் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் வெளிநாட்டு ஊடகம் ஒன்றுக்கு அளித்த பேட்டியில், கொழும்பிலுள்ள ஐ.நா.பணியகத்தில் விடுதலைப் புலிகள் ஊடுருவியுள்ளார்கள் என்று தெரிவித்திருந்தார். இந்தக் கூற்று தம்மை மிகவும் கவலைக்குள்ளாக்கியுள்ளதாக ஐ.நா. அலுவலக உயர் அதிகாரி விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையிலுள்ள ஐ.நா. வதிவிட மற்றும் மனிதநேய ஒருங்கிணைப்பாளர் பெடறி லியோன் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

இம்மாதிரியான குற்றச் சாட்டுகள் எமது பணிகளை முன்னெடுப்பதில், எமது திறமைகளில் மிகவும் பாரதூரமான பாதிப்புக்களை ஏற்படுத்தும். எமது பணியாளர்களின் பாதுகாப்பை அபாயத்துக்குள்ளாக்கும், கடந்த வருடம் மனிதநேய பணியாளர்கள் பலர் தமது உயிர்களை இழந்துள்ள பின்னணியில் எமது பாதுகாப்புக்கு பெரும் அச்சுறுத்தலாகவிருக்கும்.

எமது பணியாளர்கள் அனைவரும் தொழில் நிபந்தனைகளின் கீழ் தான் பணிக்கு அமர்த்தப்படுகிறார்கள். இதன் கீழ் அவர்கள் ஐ.நா.செயலாளர் நாயகத்துக்கு பொறுப்புக் கூறவும் ஐ.நா.கொள்கைகளின்படி நடக்கவும் கடமைப்பட்டுள்ளார்கள். நடுவுநிலைமை தவறாமல் நடக்கவும் எந்தவொரு மூன்றாவது தரப்பின் அறிவுறுத்தல்களுக்கு செவிசாய்க்காமல் இருக்கவும் கடமைப்பட்டவர்கள்.

இலங்கையில் நான் தங்கியிருந்த குறுகிய காலத்தில் எமது உள்ளூர் பணியாளர்கள், பிணக்கினால் அவதியுறும் சமூகங்களிடையே சலிப்பின்றி பணி புரிவதை அடிக்கடி பார்த்திருக்கின்றேன்

ஐ.நா.கொள்கைகளுக்கமைவாகப் பணிபுரிவதில் அவர்களுக்குள்ள அர்ப்பணிப்பிலும் தமது கண்ணியத்தைக் கேள்விக்குள்ளாக்கும் எதிலும் ஈடுபட மாட்டார்கள் என்பதிலும் எனக்கு அசையாத நம்பிக்கை உண்டு.

- இவ்வாறு அவர் தமது அறிக்கையில் தெரிவித்திருக்கிறார். (அ-ப)

# சாவகச்சேரியில் மருத்துவ முகாம்

சாவகச்சேரி மாவட்ட வைத்தியசாலையில் நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிமுதல் பிற்பகல் ஒருமணிவரை பல்துறைசார் இலவச மருத்துவ முகாம் நடத்தப்படவுள்ளது.

யாழ்.பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, யாழ். போதனா வைத்தியசாலை, சிவபூமி அறக்கட்டளை நிறுவனம், சங்கானை சுற்றயல் கூறு வைத்தியசாலை அபிவிருத்திச் சங்கம் ஆகியவை இணைந்து இந்த முகாமை நடத்தவுள்ளன.

இதில் சத்திரசிகிச்சை மருத்துவம், பெண் நோயியல், மகப் பேற்றியல், குழந்தை மருத்துவவியல், புற்றுநோயியல், கண் நோயியல், சயரோகம் மற்றும் சரும நோயியல் சார் மருத்துவர்கள் கலந்துகொண்டு சிகிச்சை வழங்குவதுடன் ஆலோசனைகளும் வழங்குவர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (1-203)

# 26 வருடங்களின் பின்னர் குடாநாட்டில் குடிசன மதிப்பீடு

யாழ்ப்பாணம்,ஜூன் 15

குடாநாட்டில் 26 வருடங்களின் பின்னர் குடிசன மதிப்பீட்டுப் பணிகள் இவ்வருடம் நடைபெறவுள்ளன.

இது தொடர்பான அறிவுறுத்தல் யாழ்.அரச அதிபரால் பிரதேச செயலகங்கள், உதவி அரச அதிபர் அலுவலகங்கள் என்பவற்றுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

கடந்த காலங்களைப் போன்று இம்முறை புள்ளி விவரங்கள் ஒரே நாளில் முன்னெடுக்கப்படமாட்டாது.

இம் மதிப்பீட்டுப் பணிக்கென கிராம அலுவலர் பிரிவு ரீதியாக ஒருவர் தெரிவுசெய்யப்பட்டு அவர் மூலமே புள்ளி விவரங்கள் சேகரிக்கப்படும். இதற்கென ஒவ்வொரு பிரிவிலும் ஒருவரைத் தெரிவு செய்யுமாறு அரச அதிபர் பிரதேச செயலர், உதவி அரச அதிபர்களுக்கு அறிவுறுத்தி உள்ளார்.

குறிப்பாக வீதிகளில் செல்பவர்கள் மற்றும் தொழிற்சாலைகளில் உள்ளவர்கள் கடந்த காலங்களைப் போன்று விசேட கணிப்பீட்டுக்கு உள்ளாக்கப்படுவார்களா என்பது தெரியவரவில்லை.

கடந்த 2001 ஆம் ஆண்டு குடிசன மதிப்பீடு செய்வதற்கான ஆயத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட போதும் இடைநடுவில் தடைப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ-202)

# புத்தளத்தில் கைதான தமிழ்ப் பெண் விடுவிப்பு

கொழும்பு, ஜூன் 15

நொச்சிகாமம், கொட்ட வெஹரப் பகுதியில் கடந்த முதலாம் திகதி லொறி ஒன்றில் வெடிகுண்டுகள் கண்டுபிடிக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக புத்தளம் பகுதியில் வைத்து கைதுசெய்யப்பட்ட நகுலேஸ்வரி என்ற தமிழ்ப்பெண் விடுவிக்கப்பட்டார்.

குற்றப்புலனாய்வுப் பொலிஸார் இவரை நேற்று கொழும்பு பிரதம நீதிவான் நீதிமன்றில் நீதிவான் குசல சரோஜினி வீரவர்த்தன முன்னிலையில் ஆஜர் செய்தனர். இவருக்கு எதிரான விசாரணைகளில்இவருக்கு பயங்கரவாதச் செயல்களுடன் தொடர்பு இல்லை என்பது தெரியவந்துள்ளது என்றும், ஆகவே அவரை விடுவிக்கும் உத்தரவை வழங்கலாம் என்றும் பொலிஸார் நீதிமன்றில் தெரிவித்தனர்.

அதனை அடுத்து அவரை விடுவிப்பதற்கான உத்தரவை நீதிமன்றம் விடுத்தது. (சி)

# சித்திரப் பாட மாணவர்களுக்கு வழிகாட்டல் கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,ஜூன்15

ஜி.சீ.ஈ உயர்தரப் பரீட்சையில் சித்திர பாடத்திற்கு தோற்றவுள்ள மாணவர்களுக்கான பரீட்சை வழிகாட்டல் கருத்தரங்கு நாளை சனிக்கிழமையும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமையும் காலை 9 மணிமுதல் மாலை 4 மணிவரை கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியில் நடைபெறவுள்ளது.

சித்திர பாட ஆசிரியர் க.பிரபாகரனின் வழிப்படுத்தலில் இக் கருத்தரங்கு நடைபெறவுள்ளது. (203)

## நாளை

ஆனி - 02 சனிக்கிழமை
16.06.2007
திதி : பிரதமை மு.ப. 08.05
நட்சத்திரம் : திருவாதிரை முன்னிரவு 09.18
சுபநேரம் : 02.52 - 04.23
ராகுகாலம் : 08.53 - 10.23

# வெளிமாவட்டக் கல்வியாளர் மேற்கொண்ட மறியற்போராட்டம் நேற்று நிறுத்தம்

### கல்வி வலய செயற்பாடுகள் இன்று வழமைக்கு

யாழ்ப்பாணம்,ஜூன் 15

யாழ்.மாவட்டத்தில் தங்கியுள்ள, தற்காலிக நியமனம் கிடைக்காத வெளிமாவட்டங்களைச் சேர்ந்த கல்விசார், கல்விசாராத அலுவலர்கள் யாழ்.கல்வி வலயம் முன் மேற்கொண்டுவந்த மறியல் போராட்டம் நேற்று தற்காலிகமாக நிறுத்தப்பட்டது. கல்விவலயச் செயற்பாடுகள் இன்று வழமைக்குத் திரும்புகின்றன.

அச்சுவேலி படை அதிகாரி நேற்று மறியல் போராட்டக்காரர்களைச்சந்தித்து அவர்களது பிரச்சினைகளைக் கேட்டறிந்தார்.

''உங்கள் பிரச்சினைகளை உயர் அதிகாரிகளுடன் பேசித் தீர்வு காணுங்கள். வேண்டுமானால் 5 பேர் மறியலில் ஈடுபடுங்கள். பெரும் எண்ணிக்கையில் கூடுவதை அனுமதிக்க முடியாது'' என்று படை அதிகாரி தங்களிடம் தெரிவித்தார் என்றும் -

மறியல் போராட்டத்தை கைவிடுவது என முடிவு செய்யப்பட்டுள்ளது என்றும் - மறியல் போராட்டக்காரர்கள் தெரிவித்தனர்.

இதன் காரணமாகப் போராட்டத்தைக் கைவிடுவதாக அவர்கள் தெரிவித்தனர்.

அதேவேளை - அவசர கலந்துரையாடல் ஒன்று நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ்.வலயத்திற்கு அருகாமையில் இடம்பெறவுள்ளது என்றும் -

முக்கிய முடிவுகள் கிடைக்கப்பெற்றுள்ளமையால் அனைவரையும் வருகை தருமாறும் வெளிமாவட்டக் கல்வி அலுவலர்கள் குழு தெரிவித்தது. (அ-1-203)

# பல்கலையில் இன்று கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,ஜூன் 15

யாழ்.பல்கலைக் கழக புவியியல் கழகம் இன்று முற்பகல் 10 மணிக்கு ''செயற்றிட்ட முகாமைத்துவம்'' என்னும் தலைப்பில் கருத்தரங்கு ஒன்றை நடத்துகிறது.

புவியியல் துறை மண்டபத்தில் நடைபெறும் இக் கருத்தரங்கில் யு.என்.டி.பியின்கள இணைப்பதிகாரி கே.றஞ்சன் கருதுரை வழங்குவார். (அ-203)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ். பல்கலைக்கழகம், யாழ். பொது நூலகம் ஆகியவற்றுக்கு இந்திய அரசு ஒரு தொகுதி நூல்களை அன்பளிப்பாக வழங்கியுள்ளது.

நேற்று நடந்த நிகழ்வு ஒன்றில் இலங்கைக்கான இந்திய தூதுவர் அலோக் பிரசாத், யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடாதிபதி கலாநிதி கே. சிவபாலனிடம் நூல்களை கையளிப்பதை முதலாவது படத்திலும் யாழ். மாநகர சபை ஆணையாளர் மு. செ. சரவணபவவிடம் கையளிப்பதை அடுத்துள்ள படத்திலும் காணலாம். கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராசா, சுரேஷ் பிரேமச்சந்திரன் ஆகியோரும் காணப்படுகின்றனர்.

# வெளி மாவட்டங்களில் உள்ள யாழ்.பரீட்சார்த்திகள் திருமலையில் தோற்றுவதற்கு வசதி செய்யப்பட்டுள்ளது

யாழ்ப்பாணம்,ஜூன் 15

இலங்கை அதிபர் சேவையில் உள்ளீர்ப்புச் செய்வதற்காக நேர்முகப் பரீட்சைக்குத் தோற்ற அழைக்கப்பட்ட பரீட்சார்த்திகள் சொந்த தேவையின் பொருட்டு தங்கியிருக்க நேர்ந்தால், அவர்கள் திருகோணமலையில் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு வசதி செய்யப்பட்டுள்ளது.

அவர்களுக்கான நேர்முகப் பரீட்சை இம்மாத இறுதியில் திருகோணமலையிலுள்ள வடக்கு மாகாண சபையின் கல்வியமைச்சில் நடைபெறுவதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளதாக இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது.

வெளி மாவட்டங்களிலுள்ள பரீட்சார்த்திகள் கல்வி அமைச்சின் செயலாளர் எஸ்.இளங்கோவனுடன் தொடர்புகொண்டு நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றக் கூடிய திகதியை உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும் என்று சங்கம் தெரிவித்துள்ளது. (அ-202)

# மந்துவில் மோதலையடுத்து குடும்பஸ்தர் ஒருவரையும் காணவில்லை என்று ஆணைக்குழுவில் முறைப்பாடு

யாழ்ப்பாணம், ஜூன் 15

மந்துவில் பகுதியில் புதன்கிழமை இடம்பெற்ற மோதலின் பின்னர் மற்றொரு குடும்பஸ்தரைக் காணவில்லை என்று மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் நேற்று முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

செம்பாடு, மந்துவில் கிழக்கு, கொடிகாமத்தைச் சேர்ந்த இராசேந்திரன் தவராசா (வயது 36) என்பவர் தமது தாயாரின் வீட்டுக்கு மோட்டார் சைக்கிளில் சென்றார் என்றும் -

இவர் வீட்டில் இருந்து புறப்பட்ட பின் வேட்டுச் சத்தங்கள் கேட்டன என்றும் -

சம்பவ இடத்தில் அவரது மோட்டார் சைக்கிள் நின்றதாக சிலர் தகவல் தந்தனர் என்றும் - அவரது மனைவி தமது முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார்.

வீடு திரும்பாத அவரைத் தேடிக் கண்டுபிடித்துத் தருமாறு அவரது மனைவி ஆணைக்குழுவிடம் கேட்டுள்ளார்.

புதன்கிழமையன்று அந்தப் பகுதியில் ஐந்து இளைஞர்களைக் காணவில்லை என ஏற்கனவே ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-1)

## பிலிப்பைன்ஸ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சேர்க்கப்பட்டிருக்கிறார்.

திருகோணமலை நகருக்கு வடக்கே இரண்டு கிலோமீற்றர் தொலைவில் அலஸ் தோட்டம் பகுதியில் இந்தச் சம்பவம் புதன்கிழமை இரவு 9.45 மணியளவில் இடம் பெற்றுள்ளது.

''இந்த முகாம் திருகோணமலை துறை முக நகருக்கு வடக்கே உள்ளது. பொதுமக்கள் இப்பகுதிக்குள் நடமாடுவதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. இத்தடை உத்தரவையும் மீறி, முகாமுக்கருகில் இரவு வேளையில், 'மேர்ஸி கோப்ஸ்' நிறுவன பணிப்பாளர் நடமாடியுள்ளார்'' என்று இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் பிரசாத் சமரசிங்க விளக்கமளித்துள்ளார்.

**நாம் கவலைப்படுவதற்கில்லை**

''கடற்படையினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்துள்ளார்கள். குண்டு அந்தனியோ விளாமோர் என்னும் பணியாளரின் தலையைத் தாக்கியுள்ளது. இது குறித்து நாம் கவலைப்படுவதற்கில்லை. இரவு வேளையில் முகாமுக்கருகில் நடமாடவேண்டாமென நாம் மக்களுக்கு எச்சரிக்கை விடுத்திருக்கிறோம். இவர் அந்த எச்சரிக்கையை உதாசீனப்படுத்தியிருக்கிறார்'' -என்றும் பிரிகேடியர் சுட்டிக்காட்டியிருக்கிறார்.

அதிர்ஷ்டவசமாக சிறு காயத்தோடு அந்தோனியோ தப்பிவிட்டார். எனினும் இத்தாக்குதலைப் பொறுத்தமட்டில் அது எங்களின் தவறாகாது. '' என்றும் ஜெனரல் பிரசாத் சமரசிங்க மேலும் குறிப்பிட்டுள்ளார்.

''எங்கள் நிறுவனத்தைச் சேர்ந்த ஊழியரொருவர் சுடப்பட்டார். இது ஒரு தற்செயல் நிகழ்வா? திட்டமிட்ட துப்பாக்கிப் பிரயோகமா என்பது குறித்து நாம் அறியோம்.

''ஆழிப்பேரலை அனர்த்தங்களுக்குப் பின்னர் மேற்கொள்ளப்பட்டு வரும் திட்டங்களை இப்பணியாளர் பார்வையிட்டு வந்தவர். திருகோணமலையில் எங்கள் திட்டப்பணிகளை மேற்பார்வை செய்து கொண்டிருந்த சமயமே இவர் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கானார். - என்று மேர்ஸி கோர்ப்ஸின் திட்ட இயக்குநர் இலிட்டா ஒவ்ரி தெரிவித்தார். (சி)

## விடுதலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடவடிக்கை எடுப்பது என்பது குறித்து இறுதி முடிவு மேற்கொள்ளப்படும் என்று சிறுவர் தொடர்பான செயற்குழு அறிவித்திருக்கிறது.

அதற்கு முன்பதாக, ஓகஸ்ட் மாதத்தில் தீர்மானம் வரையப்படும். அதற்கு முன்னர் விடுதலைப் புலிகள் சிறுவர்களைப் படையில் சேர்ப்பது குறித்து முன்னேற்றம் காட்ட வேண்டும் என்றும் அதே வட்டாரங்கள் தெரிவித்தன. (அ-ரி)

## இராணுவ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கப்பட்ட போதிலும் மக்களின் இடம்பெயர்வுகள் காரணமாக இந்தப் பணி இடம்பெற வில்லை.

தெற்கு மாவட்டங்களில் குடிசன மதிப்பீடு கடைசியாக 2001 ஆம் ஆண்டு நடைபெற்றது. பத்து வருடங்களுக்கு ஒருமுறை நாடு முழுவதிலும் ஒரே தடவையில் குடிசன மதிப்பீடு நடைபெற வேண்டும் என்பது பொது விதியாகும். (அ-1)

## மந்துவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்று யாழ். ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை -

அடையாளம் காணாத நிலையில் உள்ள இருசடலங்களையும் இனம்காட்டி பொறுப் பேற்குமாறு யாழ்.போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் கேட்டுள்ளார்.

மந்துவில் பகுதியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற மோதலின் பின் பிரஸ்தாப இளைஞன் காணாமற் போயிருந்தார் என மனித உரிமை ஆணைக் குழுவில் யாழ்.அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது தெரிந்ததே. (அ-1-203-207)

## ரணில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போல் இலங்கையை மஹிந்த அழிக்க முனைகின்றார் என எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஒரு பொதுக் கூட்டத்தில் பேசும் போது தெரிவித்துள்ளார். ஹிட்லர் ஜேர்மனிக்கு அருகிலுள்ள நாடுகளுடன் யுத்தம் புரிந்து அவற்றை ஜேர்மனியுடன் இணைத்துக்கொண்டார். ஆனால், நாங்கள் நாட்டைப் பிரிக்க முயலும் பயங்கரவாதிகளுடனேயே யுத்தம் புரிகின்றோம்.

எனவே, ரணில் விக்கிரமசிங்க மீண்டும் சரித்திரம் படிக்க வேண்டும். - என்றார் அமைச்சர். (சி)

## பெரும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குண்டு ஒன்று செயலிழக்கச் செய்யப்பட்டது என்ற தகவல் பரவிய பின்னரே முதலில் உண்டான பரபரப்பு அடங்கியது.

யாழ். நீதிமன்ற வழக்கு ஒன்றின் தடயப் பொருளான குண்டு ஒன்று பொலிஸ் நிலையத்துக்குச் சமீபமாக வைத்து வெடிக்கவைக்கப் பட்ட குண்டின் சத்தமே அது என்று பின்னர் ஊர்ஜிதமானது. (அ-1)

## பேசாலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குகளில் இருந்தவர்கள் அவற்றில் இருந்த சிமெந்துப் பொதிகளை அவசர அவசரமாக கடலில் போட்டுவிட்டு தப்பியோட எத்தனித்தனர் என்றும் அவர்களை கடற் படையினர் கைதுசெய்தனர் எனவும் பாதுகாப்புப் படையினர் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர்கள் புலிகளுக்கு சிமெந்து கொண்டு சென்ற போதே கைது செய்யப்பட்டார்கள் என்றும் மேலதிக விசாரணைக்காக இவர்கள் தலைமன்னார் பொலிஸ் நிலையத்தில் ஒப் படைக்கப்பட்டுள்ளனர் என்றும் ஊடக நிலையம் மேலும் தெரிவித்தது. (ரி)

## கொழும்பிலிருந்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விவகாரம் இப்போது முடிவுக்கு வந்துவிட்டது.

இதை மேலும் கிளறிக் கொண்டிருப் பதில் அர்த்தமில்லை - என்றார்.

செய்தியாளர்:- அரசில் அங்கம் வகிக்கும் இரு முக்கியஸ்தர்கள் கொழும்பு விடுதிகளில் தங்கியிருந்த தமிழ் மக்களை பலவந்தமாக வெளியேற்றியமை குறித்து இரு வேறு கருத்துகளைத் தெரிவித்துள்ளனர். ஏன் இந்தக் குளறுபடி?

அமைச்சர்:- இதில் எதுவித குளறு படியும் இல்லை. சிலர் இதை பெரிது படுத்த முனைகின்றனர். அரசின் நிலைப் பாட்டை பிரதமர் தெரிவித்துள்ளார். அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே இது குறித்து தமது சொந்தக்கருத்தையே தெரிவித்துள்ளார்.

செய்தியாளர்:- இதுபோன்ற சம்பவங்கள் இனிமேல் நடைபெறுமா?

அமைச்சர்:- இதற்கு உத்தரவாதமளிக்க முடியாது. ஜனநாயக நாட்டில் எது வேண்டுமானாலும் நடக்கலாம்.

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்த கருத்துகள் தொடர்பாக எனக்கு எதுவும் தெரியாது. அவர் ஏ.எவ்.பிக்கு கூறிய கருத்துகள் சில செய்திப் பத்திரிகைகளில் வெளிவந்திருப்பதைப் படித்தேன். (அ-சி)

## ஐ.நா. சபையின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதனைத்தடுத்து நிறுத்த உடனடியாக நடவடிக்கை வேண்டும் என்றும் ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகளுக்கான தூதுவர் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம்கேட்டுள்ளார்என்றுகூறப்படுகின்றது.

இதேவேளை, தாம் இலங்கைக்கு நேரடியாகச் சென்று அங்குள்ள நிலைமைகளை அவதானிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார் எனவும் -

அதற்குப்பதிலளித்தஜனாதிபதி இலங்கைக்கு நீங்கள் வரலாம் வருவதால் எந்தச் சிக்கலும் இல்லை என்று தெரிவித்துள்ளார் என்றும் அறியப்படுகிறது. (அ-சி)

## பிரபாகரனை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சர்வதேசம்இலங்கை மீது கொடுக்கும் அழுத்தம் மற்றும் சில நாடுகளின் நிதி உதவி இடைநிறுத்தம் என்பவற்றால் இராணுவ நடவடிக்கைகளை பின்னடையச் செய்துள்ளன - என்றார் அவர். (சி)

முக்கிய கூட்டம்

ஆங்கில ஆசிரியர்களுக்கான டிப்ளோமா DETE 04/05 பயிற்சியில் சித்தியடைந்த அனைத்து ஆங்கில ஆசிரியர்களுக்குமான முக்கிய கூட்டம் 17.06.2007 ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10 மணிக்கு யா/ சன்மார்க்க மகா வித்தியாலயத்தில் (பெருமாள் கோவிலுக்கு முன்பாக) நடைபெற விருப்பதால் அனைவரையும் தவறாது சமுகமளிக்குமாறு அழைக்கப்படுகின்றார்கள்.

DETE 04/05 ASSOCIATION, JAFFNA DISTRICT.

தேர்வின் எதிர்பார்த்த வெற்றிக்கான
மாபெரும் கருத்தரங்கு
தமிழ் திரு.குழந்தை

- இவ்வருடம் வெளிமாணவர்கள் 200 பேருக்கு மட்டுமே அனுமதி
- கருத்தரங்கிற்கான திகதி பின்னர் அறிவிக்கப்படும்.
- கருத்தரங்கிற்கான அனுமதிகளை 19 ஆம் திகதிக்கு முன் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளவும்.

விக்னா கல்வி நிறுவனம்
தலைமையகம், 52, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(அ/52670)

தேசிய பாடசாலை ஆசிரியர் போட்டிப் பரீட்சை
விசேட வழிகாட்டல் வகுப்புகள்
பொது அறிவு, பொது உளச்சார்பு
ஆரம்பம் 16.06.2007 9 a.m.
(சனி, ஞாயிறு 9 - 3 மணி வரை)
திகழ் கல்வி நிறுவனம்
கே.கே.எஸ். வீதி, இணுவில்.

தயவு செய்து குறித்துக் கொள்ளுங்கள்
STP
15.06.2007 வெள்ளிக்கிழமை முதல் 149, கஸ்தூரியார் வீதி எனும் புதிய முகவரியில் (உதயனுக்கு அருகில்) அனைத்துச் சேவைகளையும் வழங்க விருகின்றோம்
STP Your Partner in IT Solutions
149, Kasthuriar Road. Jaffna.T.P:0[illegible]

கொழும்பு மாநகரில் நம்பிக்கையான பாதுகாப்பு மிக்க தங்குமிட வசதிகட்கு மீண்டும் புதுப்பொலிவுடன் உங்களை வரவேற்கிறது.
தம்பி லொட்ஜ்,
தம்பி கட்டடம்,
177, பழைய சோனகத்தெரு,
கொழும்பு - 12
தொலைபேசி எண்கள் -
071 4353078, 011 2343126

BIT UCSC
விஞ்ஞானமாணி-தகவல் தொழில்நுட்பம்
Bachelor of Information Technology
- BIT கற்கைநெறிகளுக்கான பரீட்சைகள் அனைத்தும் மீண்டும் யாழில் நடைபெறும்.
- தெரிவுப்பரீட்சை யாழ்.பல்கலைக்கழகத்தில் 24.06.2007 ஞாயிற்றுக்கிழமை நடைபெறும்.அனுமதி அட்டைகளை இன்று முதல் எமது நிறுவனத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
- BIT கற்கைநெறியை பயின்று பதிவினை புதுப்பிக்காத மாணவர்களும் பரீட்சைக்கு விண்ணப்பிப்போரும் MCS நிறுவனத்துடன் உடன்தொடர்புகொள்ளவும். இவர்களுக்கான விசேடபிரிவு 16.06.2007 முதல் நடைபெறும்.
- BIT கற்கைநெறியை சிறப்புற நடாத்தும் நிறுவனமாக MCS நிறுவனம் 2007 BIT பட்டமளிப்பின் போது விருது வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளது.

MCS, 324, Palaly Road Jaffna
Supported by UNDP/JRRP

பொருளியற் கல்லூரி
யாழ். இணுவில்
2009 A/L அலகு 2
சந்தைப் பொருளாதாரம்
By: M.C. சுதாகரன் B.Com. (Hons.)
சனி, ஞாயிறு தினங்களில்
யாழ். நகரில் - 9 a.m. இணுவிலில் - 1 p.m.
BARATHY - சித்தன்கேணியில்
செவ்., வியா. - 5 p.m.
விரும்பிய இடத்தில் அனுமதிகளைப் பெற்றுக்கொள்ளவும்.

தேசிய பாடசாலை ஆசிரியர் தெரிவுப் போட்டிப் பரீட்சை
வழிகாட்டல் கருத்தரங்கு
சனி (16/06) ஞாயிறு (17/06), சனி (23/06)
காலை 9 மணி தொடக்கம் 2 மணிவரை
ஆசிரியர்கள்:-
அ.குமாரவேல், த.தவசேகர்.
யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப் படிப்புகள் பிரிவு
(61686) [யாழ். போதனா வைத்தியசாலைக்கு முன்பாக]

பொருளியல்
2009 A/L
2008 A/L
பணம் வங்கி பொது விலை மட்டம்
V.V.K. கரன் (B.B.A.)
பெனின்சுலா அக்கடமி

A/L 2008, 2009
ஆசிரியர்
T. திருமுருகன்
ஆரம்பம் 15.06.2007
திகழ்
விஸ்டம்

A/L 2009 & 08
B.St. - Mr. பசில்
Acc. - Mr. தவா
Eco. - Mr. சுஜீந்தரன்
Tamil - Mr. சிவா
Log. - Miss. சசிகலா
Chris - Mrs.A. மல்லிகா
Drama - Mr. மயூரன்
Eng., Geo., G.I.T., Art, Hindu
SHAMROCK
சுச்மோட்டை, யாழ்.

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) [illegible] கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 15.06.2007இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org